பக்கங்கள்:-26

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 08 | சனிக்கிழமை | 23.11.2024 | அதிர்வு 113

**சீரற்ற காலநிலையால்**

## யாழ். மாவட்டத்தில் 7 ஆயிரம் பேர் பாதிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக காரணமாக 1901 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் 02





# புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்கு கட்டுப்பட்டுச் செயற்படக்கூடாது அநுர

**ஒற்றையாட்சிக்கே முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் விமல் அணி வலியுறுத்து**

“வடக்கு மக்கள் இனவாதம், பிரிவினை வாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்து தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்துள்ளார்கள். எனவே, பிரிவினைவாதத்தைப் போசிக்கும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் நோக்கங்களுக்கமைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க செயற்படக் கூடாது.”

- இவ்வாறு விமல்வீரவன்சதலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர வலியுறுத்தினார். 05

# 13 பற்றி கதைக்கும் தருணம் இதுவல்ல! புதிய அரசமைப்பை உடன் இயற்றுங்கள்!!

## அநுர அரசிடம் சஜித் அணி வேண்டுகோள்



“அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றி கதைப்பதற்கான தருணம் இதுவல்ல. எனவே, வழங்கிய உறுதிமொழியின் பிரகாரம் புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய பணிகளை தேசிய மக்கள் சக்தி முன்னெடுக்க வேண்டும். அதற்கு ஆதரவு வழங்கப்படும்.”

– இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி அஜித் பி பெரேரா கூறியவை வருமாறு:- 04




புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்று முன்தினம் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவைக் கொழும்பில் சந்தித்துப் பேசினர்.

அச்சமயம் நம் எம்.பிக்களில் சிலருக்கு சத்தம் சந்தடியின்றி ஒரு ‘ஷொட்’ கொடுத்திருக்கின்றார் இந்தியத் தூதுவர் எனத் தெரிகின்றது.

“வடக்கு – கிழக்கில் தமிழ்த் தேசியம் தோற்றால் அது இந்தியாவின் நலனுக்கு பாதிப்பு” – என்று ஓர் எம்.பி . கூற, அவரைப் பார்க்காமலேயே பதிலடி கொடுத்திருக்கின்றார் இந்திய தூதர். அவரின் உடல் சைகை மொழி அவரது எரிச்சலை – அதிருப்தியை – வெளிப்படுத்தியதாக கூட்டத்தில் பங்கு பற்றிய ஓர் எம்.பி. குறிப்பிட்டார்.

“ஜனாதிபதி தேர்தலில் நீங்கள் ஒருவரை நிறுத்தப் போய்த்தான் இந்தப் பிளவு, பிரச்சினை, இழுபறி எல்லாம் உருவாகின. (இந்திய) தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் உங்களை சந்தித்து ஆலோசனை வழங்கினார். வெளியுறவுத்துறை 05

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# தேர்தலிற்கு பல கோடி ரூபாக்களை செலவிட்டோர் வெள்ளத்தில் பாதிப்புற்றோருக்கு உதவ வேண்டும்!

## வலியுறுத்துகின்றார் கீதநாத் காசிலிங்கம்




(என்.புவியரசன்)

தேர்தலிற்கு பல கோடி ரூபாக்களை செலவு செய்தவர்கள் மழையால் பாதித்தவர்களிற்கு உதவுவதற்கும் முன் வர வேண்டும் என கீதாநாத் காசிலிங்கம் வேண்டுகோள் விடுத்தார்.

பொதுஜன பெரமுனக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளரும், யாழ. மாவட்டத்தில் அக்கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளருமான கீத்நாத் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

யாழ். மாவட்டத்தில் ஒரு நாள் பெய்த கன மழைக்கு 610 குடும்பங்கள் பாதிப்படையும் நிலையிலேயே இன்றும் யாழ்ப்பாணம் உள்ளது. எமது அரசு மீண்டும் ஆட்சிபீடம் ஏறினால் வடக்கின் வசந்தம் இரண்டாம் கட்டத்தின் கீழ் மக்களின் இத்தகைய இடப்பெயர்வு இடம்பெறாத வகையிலான ஓர் அபிவிருத்தி முன்னெடுக்கப்படும்.

இதேநேரம் நடந்து முடிந்த தேர்தலில் வடக்கு கிழக்கில் இருந்து அதிக மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த போதும் வடக்கு கிழக்கைச் சேரந்தவர்களிற்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை. இ.சந்திரசேகரம் வடக்கு கிழக்கில் சேவையாற்றியிருக்கலாம். ஆனால் வடக்கு கிழக்கில் அமைச்சரவை அமைச்சரோ வடக்கில் ஓர் பிரதி அமைச்சரோ இந்த அரசில் கிடையாது.

வடக்கு கிழக்கில் இல்லாத பொய் எல்லாம் சொல்லி வாக்கை எடுத்தனர். ஆனால் இலங்கையின் வரலாற்றில் ஒரு முஸ்லீமோ அல்லது வடக்கு கிழக்கு பிரதிநிதியோ இல்லாத அமைச்சரவையை முதல் தடவையாக உருவாக்கியுள்ளனர்.

இதனைக் கேட்டால் இன மதமற்ற திறமையானவர்களிற்கு அமைச்சரவையில் இடமளித்திருப்பதாக கூறுகின்றனர். அப்படியானால் திறமையானவர்களைப் பட்டியலில் இணைத்திருக்க வேண்டும். – என்றார்.

# இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் ஜனாதிபதி செயலாளருடன் சந்திப்பு



ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவுக்கும் ஜப்பானிய தூதுவர் அகியோ இசோமாவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கத்திற்கு வாழ்த்துத் தெரிவித்த ஜப்பானிய உயர்ஸ்தானிகர், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை திறம்பட தொடர்ந்தும் முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

வீண் விரயம், ஊழல், மோசடியற்ற நாட்டை உருவாக்கி நாட்டை பொருளாதார ரீதியில் முன்னோக்கிக் கொண்டு செல்லும் புதிய கொள்கைக்கு ஜப்பான் அரசாங்கத்தின் பாராட்டுக்களை தெரிவித்த அகியோ இசோமடா, இலங்கையின் புதிய அரசாங்கத்திற்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிற்கும் சிறந்த ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

### யாழ்.மாவட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவும், 27 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன எனவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

சங்கானை பிரதேச செயலகப் பிரிவில் 573 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 335 பேரும், யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பிரிவில் 470 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 520 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 265 குடும்பங்களைச் சேர்ந்த 928 பேரும், ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவில் 215 குடும்பங்களைச் சேர்ந்த 901 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவில் 171 குடும்பங்களைச் சேர்ந்த 599 பேரும், காரைநகர் பிரதேச செயலகப் பிரிவில் – குடும்பங்களைச் சேர்ந்த 508 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 64 பேரும், கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 73 பேரும், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 47 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 35 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் அறிக்கையிட்டுள்ளார்.

# இலக்கை நிர்ணயித்துச் செயற்படுங்கள்!

## அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் பணிப்பு








“வடக்கு மாகாணத்தில் பின்தங்கியுள்ள பிரதேசங்களை கல்வியால்தான் அபிவிருத்தி செய்ய முடியும். அதைக் கவனத்தில் எடுத்து அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும். எந்தவொரு விடயத்திலும் கண்காணிப்பும், தொடர் நடவடிக்கையும் இருந்தால் மாத்திரமே அதில் வெற்றி சாத்தியம். அதைப் புரிந்துகொண்டு அதிகாரிகள் செயற்பட வேண்டும்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சின் துறைசார் மீளாய்வுக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

கூட்டத்துக்குத் தலைமையேற்று ஆரம்ப உரையாற்றிய ஆளுநர்,

“விஞ்ஞானப் பிரிவை உயர்தரத்தில் தெரிவு செய்யும் மாணவர்கள் சிலர், தமது பிரதேச பாடசாலைகளில் அந்தக் கற்கை நெறியை படிப்பிப்பதற்குரிய ஆசிரியர்கள் இல்லாமல் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வேறு நகரங்களுக்குச் சென்று அங்கு தங்கியிருந்து படிக்கின்றனர். இவ்வாறு படிக்கும் மாணவர்களில் சிலர், கல்வியை ஒழுங்காகத் தொடராது தவறான வழியில் செல்லும் சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன. எனவே, சகல பாடசாலைகளிலும் விஞ்ஞானப் பிரிவை உயர்தரத்தில் மாணவர்கள் தெரிவு செய்தால், அதைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

பாடசாலையில் நடக்கும் எந்தவொரு நிகழ்வுக்கும் மாணவர்களிடமோ, ஆசிரியர்களிடமோ எந்தவொரு கட்டணமும் அறவிடக் கூடாது. அரசின் சுற்றறிக்கையும் அதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. கட்டண அறவீடுகள் நடக்காமல் இருப்பதை கல்வி அமைச்சின் செயலர் கவனித்துக்கொள்ள வேண்டும்.

பாடசாலைகளுக்கு நேரடியாக வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப் பெறுகின்றன. ஆனால், அவற்றில் பல இடங்களில் வெளிப்படைத்தன்மை இல்லை. இது ஊழல், மோசடிக்கு வழிவகுக்கின்றது. இதைக் கண்காணிப்பதற்கு இறுக்கமான பொறிமுறை உடனடியாக உருவாக்கப்பட வேண்டும்.

ஆசிரியர்கள் பலர் கல்வி அலுவலகங்களுக்குச் சென்றால் அவர்களை அதிகாரிகள் சந்திப்பதில்லை என்ற முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன. அவ்வாறு செயற்படக்கூடாது. அவர்களுக்கு சேவையாற்றுவதற்காகத்தான் நாங்கள் இருக்கின்றோம். எனவே, ஆசிரியர்கள் சொல்வதைப் பொறுமையாகக் கேட்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்படும்போது திறமையான ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். வடக்கு மாகாணம் 2030 ஆம் ஆண்டு கல்வியில் முதலிடத்துக்கு வரவேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்துப் பயணிக்க வேண்டும். அதை நோக்கி அடுத்தடுத்த ஆண்டுகளில் முன்னேறிச் செல்ல வேண்டும்.

கடந்த காலங்களைப் போன்று கல்வித்துறையில் இனி அரசியல் தலையீடுகள் இருக்காது என ஜனாதிபதி உறுதியளித்திருக்கின்றார். எனவே, அதிகாரிகள் துணிந்து பணியாற்ற முடியும். கடந்த காலங்களில் அதிகாரிகள் பழிவாங்கப்பட்ட சம்பவங்களும் இனி நடக்காது. எனவே, மக்கள் நம்பும் வகையில் அரச அதிகாரிகளின் சேவைகள் இருக்க வேண்டும்.” – என்றார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் குறிப்பிடும்போது,

“வடக்கு மாகாணத்தில் 12 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலைமை இருக்கின்றது. தேசிய ரீதியில் கூட 17 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலைமைதான் உள்ளது. இங்கு பாட ரீதியாகவே ஆசிரியப் பற்றாக்குறை இருக்கின்றது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தேசிய ரீதியில் முதலிடத்திலிருந்தாலும், ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 8ஆம் இடத்தில்தான் வடக்கு மாகாணம் உள்ளது. இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

இதற்கு ஆசிரியர்களின் கற்பித்தலை கண்காணிப்பதற்கான பொறிமுறை வலுவாக இல்லை என்பதும் ஒரு காரணம். அதைக் கண்காணிப்பதற்கும் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் உரிய பணியை ஆற்றும் ஆசிரிய ஆலோசகர்களுக்கு வடக்கு மாகாணத்தில் பாரிய வெற்றிடம் நிலவுகின்றது. எனவே, அந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சிரேஷ்ட ஆசிரியர்களை, ஆசிரிய வளவாளர்களை நியமிப்பதற்கு ஆளுநரின் அனுமதி வேண்டும்.” – என்றார்.

ஆளுநர் உடனடியாக அதற்கான அனுமதியை வழங்கினார்.

“வெளிமாவட்டங்களில் 7 ஆண்டுகளில் பணியாற்றிய பின்னர் சொந்த மாவட்டங்களுக்குத் திரும்பும் ஆசிரியர்கள் பலர், தமது வீட்டுக்கு அருகில் உள்ள பாடசாலையே வழங்கப்பட வேண்டும் என்று கோருகின்றனர். இந்த மன நிலை வளர்ந்து செல்வதாகவும், எதிர்காலத்தில் இது சிக்கலை ஏற்படுத்தக்கூடும்.” – என்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் 4 ஆயிரத்து 500 தொடக்கம் 6 ஆசிரியர்கள் ஏனைய மாவட்டங்களுக்குச் சென்று வருகின்றனர். இவர்கள் அந்தந்த மாவட்டங்களில் தங்கி நின்று கற்பிப்பதற்கு வசதிகள் உள்ளன. ஆனாலும், இவர்கள் இப்படிச் செல்வதால், பாடசாலை முடிந்தவுடன் அங்கிருந்து புறப்படுகின்றனர். மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகளை நடத்தும் வாய்ப்பும் இல்லாமல் போகின்றது. இவை தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

வடக்கு மாகாணத்தின் சில பாடசாலை அதிபர்கள் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிக்குச் செல்லும் மாணவர்களின் தபால் அடையாள அட்டையில் மோசடி செய்து, வயது கூடியவர்களை குறைந்த வயதுடையர்களின் போட்டிக்கு அனுப்பும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.” – என்றார்.

இதன்போது ஆளுநர், வெற்றி தோல்வி முக்கியமல்ல. ஒழுக்கம்தான் முக்கியம். அவ்வாறான அதிபர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார்.

அதேபோல் வடக்கு மாகாண கலாசாரப் பிரிவால், பிரதேச செயலக ரீதியான கலாசார நிகழ்வுகளுக்கு வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபா நிதியை இரண்டரை இலட்சம் ரூபாவாக அதிகரிப்பதற்கும், மாவட்ட நிகழ்வுகளுக்கு வழங்கப்படும் நிதியை 5 இலட்சம் ரூபாவாக அதிகரிப்பதற்கும் ஆளுநர் அனுமதி வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநருடன், வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# சி.ஐ.டியில் ஹரின் பெர்னாண்டோ 3 மணித்தியாலங்கள் வாக்குமூலம்



முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ குற்றப்புல னாய்வு திணைக்களத்தில் நேற்று முன்னிலையாகினார்.

அவரிடம், சுமார் 3 மணித்தியாலங்கள் வாக்குமூலம் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கெஹலிய ரம்புக்வெல்ல சுகாதார அமைச்சராக இருந்த காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட தரமற்ற மருந் துகள் அரச வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்று முற்பகல் அவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னி லையாகியிருந்தார்.

இந்தநிலையில், நேற்று பிற்பகல் 1 மணியளவில் அவர் அங்கிருந்து வெளியேறியிருந்தார்.

# ஐஸ் போதைப்பொருளுடன் மூவர் சம்மாந்துறையில் நேற்றுக் கைது

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் மூவரை நேற்று வெள்ளிக்கிழமை சம்மாந்துறை தென்னம்பிள்ளை கிரா மம் எனும் பிரதேசத்தில் மாலை வேளையில் சம்மாந்துறை பெருங்குற்றப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சம்மாந்துறை பெருங்குற்றப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாவடிப்பள்ளி பகுதியைச் சேர்ந்த 18 மற்றும் 20 வயதுடைய இருவரும், சம்மாந்துறை பிரதேசத்தை சேர்ந்த 34 வயது டைய நபரொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள னர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரிடமும் இருந்து 600 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப் பட்டுள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபர்களை சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.




இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந் துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையில் குமார சிங்க (25955), றபீக் (62053), இஸ்மாயில் (64499), யோகேஸ் வரன் (4943) உள்ளிட்ட அதிகாரிகள் இச்சோதனை நடவடிக் கையில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 13 பற்றிக் கதைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“13,14,15 என கதைத்துக்கொண்டிருப்பதற்கான தருணம் இதுவல்ல. நாட்டுக்குப் புதியதொரு அரசமைப்பு அவசியம். நாடாளுமன்றத்தில் இதனை செய்வதற்குரிய மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலமும் தேசிய மக்கள் சக்திக்கு கிட்டியுள் ளது.

அதேபோல வடக்கையும், கிழக்கையும், மலையகத்தை யும்கூட பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியாக தேசிய மக்கள் சக்தி மாறியுள்ளது.

மூவின மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பி னர்கள் அக்கட்சியில் உள்ளனர்.

புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் என்ற உறுதி மொழியை தேசிய மக்கள் சக்தி கொண்டுவர வேண்டும். அதற்குரிய ஆதரவை நாம் வழங்குவோம்.

ஒரு வருட காலப்பகுதிக்குள் இதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். சர்வகட்சி பொறிமுறை ஊடாக இதற்கான பணியை முன்னெடுத்தால் நல்லது.” – என்றார்.

# பிள்ளையான் சி.ஐ.டியில் 7 மணிநேர வாக்குமூலம்

பிள்ளையான் எனப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் நேற்று முன்னிலையாகியிருந்தார்.

அவரிடம், சுமார் 7 மணித்தியாலங்கள் வாக்குமூலம் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாவது நாளாகவும் நேற்று குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் செனல் 4 தொலைக்காட்சி தயாரித்த விசேட காணொளித் தொகுப்பு ஒன்றில் சிவநேசதுரை சந்திரகாந்தனின் முன்னாள் செயலாளரான அசாத் மௌலானா என்பவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவ



நேசதுரை சந்திரகாந்தன் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உங்களுக்கு ஆலோசனை தந்தது. அவற்றையெல்லாம் நீங்கள் செவி மடுக்காமல் நடந்து நிலைமையைக் குழப்பி விட்டீர்கள்!" – என்ற சாரப்பட இந்திய தூதுவர் செம டோஸ் கொடுத்தார் என்று தகவல்.

ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்திய முடிவையே நேரடியாகச் சுட்டாமல் இந்திய தூதுவர் அப்படி போட்டுப் பிடித்தார் என்று கருதப்படுகிறது.

தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து நின்ற சிறிதரன், சிறிநேசன், கோடீஸ்வரன் மற்றும் அவ்விடயத்தில் 'அங்கிடுதத்தியாக' அரைவழியில் நின்று நடனமாடிய குகதாசன் போன்றோருக்கு இந்தியத் தூதரின் கருத்து விளங்கி இருந்தால், விழி பிதுங்கி இருக்கும் என்று கருதலாம்.

சாணக்கியனின் மட்டக்களப்பு வெற்றியை மெச்சுவது போல இந்தியத் தூதுவரின் பேச்சுப் பாணி இருந்ததாகவும் ஒரு தகவல் தெரிவித்தது.

\+ + +

2023 ஆம் ஆண்டுக்குரிய குடிசனப் புள்ளி விவரக் கணக்குகளின்படி அது வரையான ஐந்து வருட காலத்தில் 96 அரசுப் பாடசாலைகள் மாணவர்களின்றி மூடப்பட்டிருக்கின்றன. அதே வேளை மாணவர் எண்ணிக்கை ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 965 இனால் குறைந்திருக்கின்றது. அதே சமயம் ஆசிரியர்கள் எண்ணிக்கையும் 8,803 இனால் இதே காலப்பகுதியில் வீழ்ச்சி அடைந்திருக்கின்றது.

2023 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 10,096 அரச பாடசாலைகள் உள்ளன. அவற்றில் 396 பாடசாலைகள் தேசிய பாடசாலைகள். மாணவர்கள் எண்ணிக்கை 38 லட்சத்தில் 82 ஆயிரத்து 688. இவர்களில் 8 லட்சத்து 30 ஆயிரத்து 21 மாணவர்கள் தேசிய பாடசாலைகளில் கல்வி கற்கிறார்கள்.

ஆண் – பெண் ஆசிரியர்கள் விகிதாசாரம் கவனிக்கத்தக்கது. மொத்தம் உள்ள 2 லட்சத்து 37 ஆயிரத்து 789 ஆசிரியர்களில் ஆக 56 ஆயிரத்து 570 பேர் மட்டுமே ஆண் ஆசிரியர்கள். மிகுதி ஒரு லட்சத்து 81 ஆயிரத்து 219 ஆசிரியர்கள் பெண்கள்.

## புலம்பெயர் தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது கொள்கைப் பிரகடனத்தில் இந்த நாட்டில் இனி இனவாதத்துக்கும், மதவாதத்துக்கும் இடமில்லை என்று குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி அண்மைகாலமாக இவ்வாறு குறிப்பிடுவதை அவதானிக்க முடிகின்றது.

தேசிய மக்கள் சக்திக்குக் கிடைத்துள்ள ஆணை அமோகமானது. வடக்கு மக்கள் இனவாதம், பிரிவினைவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளார்கள். பிரிவினைவாதத்தை முன்னிலைப்படுத்திச் செயற்பட்ட எம்.ஏ.சுமந்திரனையும் தோற்கடித்துள்ளார்கள். இருப்பினும் ஏனைய பிரிவினைவாதிகள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

வடக்கு மக்கள் வழங்கியுள்ள இனவாதமற்ற ஆணையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், தேசிய மக்கள் சக்தி அரசுக்கும் உண்டு.

ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள கனடா வாழ் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் வகையில் யோசனைகளை முன்வைத்துள்ளன.


பிரிவினைவாதத்தைப் போசிக்கும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் நோக்கங்களுக்கமைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க செயற்படக் கூடாது. வடக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு கொள்கை அடிப்படையில் தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம்.

இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த பல்வேறு தரப்பினர் அரசுக்கு அழுத்தம் பிரயோகிக்கின்றனர். நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாத்த இராணுவத்தினரைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கும், அரசுக்கும் உண்டு.

நாட்டின் ஒற்றையாட்சிக்கு முன்னுரிமை வழங்கி அரசு செயற்பட வேண்டும். தேசியத்துக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் அரசு தீர்மானங்களை எடுத்தால் சமூகக் கட்டமைப்பில் பாரிய நெருக்கடிகள் ஏற்படும். நாட்டின் நலன் கருதி அரசு எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது. புதிய யாப்பு வரைவின் உள்ளடக்கம் குறித்து ஆராய்ந்து வருகின்றோம். வெகு விரைவில் அவற்றையும் பகிரங்கப்படுத்துவோம்." – என்றார்.



# விஞ்ஞானம், தொழில்நுட்பம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் நியமனம்

அமெரிக்க ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கோமிகா உடுகமசூரிய, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நியமனக் கடிதம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு டி.எஸ்.சேனாநாயக்க கல்லூரியின் பழைய மாணவரான கோமிகா உடுகமசூரிய, கொழும்பு பல்கலைக் கழகத்தில் இரசாயனவியல் பட்டம் பெற்றவராவார்.

# சர்வதேச நாணய நிதியத்துடனான மூன்றாவது மீளாய்வு கலந்துரையாடல் வெற்றிகரமாக நிறைவு



சர்வதேச நாணய நிதியத்துடன் நடத்தப்பட்ட மூன்றாவது மீளாய்வு கலந்துரையாடல் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் சர்வதேச நாணய நிதியத்தின் சார்பில் சிரேஷ்ட தூதுக்குழு பிரதானி பீட்டர் ப்ரூவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்ததுடன் இலங்கை அரசாங்கம் சார்பில் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ உள்ளிட்ட குழுவினரும் கலந்துகொண்டனர்.

இதன்படி, சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் இடம்பெற்ற மூன்றாவது மீளாய்வு தொடர்பான கலந்துரையாடல் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2024



“அறச்செயல்களின் மொத்த வடிவம் மரமே. கைமாறு கருதாது, நமக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் வாரி வழங்குபவை மரங்கள்தான். தன்னை வெட்டுபவனுக்கும் கூட நிழலாய் இருந்து அவனைக் காப்பதும் மரங்களே!”

- கௌதம புத்தர்

# குறைவான எரிபொருள் செலவுடைய வாகனங்களை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க நடவடிக்கை

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் குறைந்த எரிபொருள் செலவுடைய வாகனம் வழங்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிக்காலம் முடியும் வரை அந்த வாகனத்தை பயன்படுத்தி மக்கள் சேவையை மேற்கொள்ள முடியும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்கள் வழங்கப்படாது எனவும் மக்களின் வரிப்பணம் விரயமாவதை குறைக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



# பொலிஸ் அதிகாரிகளின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அவசர வேலைத்திட்டம்




குறைந்த தரத்தில் உள்ள பொலிஸ் அதிகாரிகளின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அவசர வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் பதவிக்கு கீழுள்ள அதிகாரிகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு உள்ளாகி வருகின்றனர் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டுள்ளார்.

தொலைதூரப் பகுதிகளில் பணிக்கமர்த்தப்படுகின்றமை, தொடர்ச்சியாக கடமைகளில் அமர்த்தப்படுதல், முறையான பதவி உயர்வு நடைமுறை இன்மை, முறையற்ற இடமாற்றம் போன்ற பல பிரச்சினைகள் காணப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினைகள் தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுடன் கலந்துரையாடி நிவர்த்திப்பதற்கான முறைமையைத் தயாரிக்கவுள்ளதாகவும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பெருமைக்குரிய பொலிஸ் அதிகாரியாக, தனது தொழில் கண்ணியத்தைப் பாதுகாக்கும் வகையில், பொலிஸ் அதிகாரிகள் பணியாற்றத் தேவையான சூழலை உருவாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய வழங்கப்பட்ட உரிமங்களில் முறைகேடு



இலங்கைக்கு மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட 1000 இற்கும் மேற்பட்ட உரிமங்கள் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளன என விசேட கணக்காய்வு மூலம் தெரியவந்துள்ளது.

வெளிநாடுகளில் பணிபுரியும் தகுதியுடைய பலருக்கு அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லை என கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி.விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த திட்டம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை தற்போது நாடாளுமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி அறிக்கை கூடிய விரைவில் சபையில் சமர்ப்பிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரிசி மாபியா!

தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசு எதிர்கொள்ளும் ஒரு மாபியா கும்பல் குறித்து ஆங்கில நாளிதழ் ஒன்று விலாவாரியாக விவரித்திருக்கின்றது.

அரிசிஆலைஉரிமையாளர்களின்மாபியாக் குழு நெல்லைப் பதுக்கி, நாட்டில் அரிசித் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, பெரும் களேபரம் பண்ணும் போது, அதை தடுத்து நிறுத்த முடியாத வக்கற்ற நிலையில் அடுத்தடுத்து வந்த அரசுகள் இருந்தன. அதே நிலையில் தான் இப்போதைய தேசிய மக்கள் சக்தி அரசும் இருப்பதாக அந்த நாளேடு சாடுகிறது.

இந்த அரிசி ஆலை உரிமையாளர்களின் மாபியாவை அடக்குவதற்கு வக்கற்ற அரசு, நெல் பதுக்கலுக்குத் தீர்வாக அரிசியை இறக்குமதி செய்வது அபத்தமானது மட்டுமல்ல, வலிமை மிக்க அரிசி ஆலை உரிமையாளர்களிடம் அரசாங்கம் அவமானகரமாக சரணாகதி அடைவதை அது சுட்டிக்காட்டுவதாக அந்த நாளிதழ் கண்டித்து இருக்கின்றது.

விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்கான அரசியல்தலைமைத்துவத்தை வழங்கிய அரசுத் தலைமைகள் உட்பட எல்லா அரசுத் தலைமைகளும் அரிசி ஆலை மாபியாவை அடக்குவதில் வெட்கக்கேடான வகையில் தோல்வி அடைந்தன என்று அந்த நாளேடு சுட்டிக்காட்டுவதில் அர்த்தம் இல்லாமல் இல்லை.

சட்டவிரோதமாக சேகரிக்கப்பட்ட வாகனங்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவற்றின் உரிமையாளர்களை கைது செய்து, விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுக்கும் அரசாங்கம் - எதிர்க்கட்சிப் பிரமுகர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் எதிராக தீவிர விசாரணைகளைத் துல்லியமாக நடத்தும் இந்த அரசாங்கம் - நெல்லைப் பதுக்கி, செயற்கையாக அரிசி தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் அரிசி ஆலை உரிமையாளர்கள் விடயத்தில் வக்கற்றிருப்பது ஏன் என்று கேட்கப்படுகின்றது.

நாட்டில் போதியளவு அரிசி கையிருப்பு இருப்பதாக விவசாய திணைக்கள தரவுத் தளத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதை ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் சிரேஷ்ட விவசாய பொருளாதார நிபுணர் துமிந்த பிரியதர்ஷன, கடந்த மாதம் நடைபெற்ற கூட்டமொன்றில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் சுட்டிக்காட்டினார். ஆகவே, அரிசி இறக்குமதி தேவையில்லை என்று வலியுறுத்திய அவர், நுகர்வோர் விவகார அதிகாரசபை நிர்ணயித்த அரிசி விலையைக் கடைப்பிடிக்குமாறு ஆலைகளைக் கேட்கும் போதெல்லாம் அரிசித் தட்டுப்பாடு ஏற்படுகின்றது என்பதையும் சரியாக சுட்டிக்காட்டினார்.

வர்த்தகம் மற்றும் வியாபாரம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்கவும் தேசிய மக்கள் சக்தி நாடளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளருமான நாமல் கருணாரத்ன ஆகியோரும் நாட்டில் போதுமான அரிசி இருப்பு உள்ளதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இத்தகவல்களின் மூலம், அரிசியின் விலையை உயர்த்துவதற்காக, பெரிய அளவிலான ஆலைகள், அரிசிக்குச் செயற்கையான தட்டுப்பாடு ஏற்படுத்தியிருப்பது தெளிவாகிறது. இந்தப் பின்புலத்தில் அரசாங்கம் ஏன் அரிசியை இறக்குமதி செய்யத் தேர்ந்தெடுத்தது என்பது புரியாமல் உள்ளது என அந்த நாளிதழ் சீறுகின்றது.

பதுக்கல் காரணமாக அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், அரசு அரிசியை இறக்குமதி செய்யக் கூடாது. மாறாக, பெரிய அளவிலான அரிசி ஆலைகளை உறுதியான கரத்துடன் கையாள்வதும், அவர்கள் சட்டத்திற்குக் கீழ்ப்படிவதை உறுதி செய்வதுமே சரியான தீர்வு என்று அந்த நாளிதழ் வலியுறுத்துகின்றது.

இறக்குமதி செய்யப்படும் அரிசியின் பெரும்பகுதி என்னவாகும் என்பதை ஒருவர் கணிக்க முடியும் என்கிறது அந்த நாளிதழ்.

அரிசி இறக்குமதியாகத் தொடங்கியதும் அரிசி ஆலை மாஃபியாக்கள், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அரிசியைச் சந்தைக்கு வழங்குவதை அதிகரித்து, விலையைக் குறைக்கும் விவசாயிகள் மற்றும் நுகர்வோரை சுரண்டுவதன் மூலம் அதன் உறுப்பினர்கள் ஏற்கனவே போதுமான லாபம் ஈட்டியுள்ளனர். அந்தப் பின்புலத்தில் இறக்குமதியாகும் அரிசி கால்நடைத் தீவனமாக மாற வாய்ப்புள்ளது. அறுவடைக் காலம் தொடங்கும் நேரத்தில் இந்த வித்தையை வலிமை மிக்க அரிசி ஆலை மாபியாக்கள் வழக்கமாக விளையாடுவார்கள் என்று அரசுக்கு எச்சரிக்கப்பட்டுள்ளது.



# உரத் தொழிற்சாலையில் வாயு கசிவு: 3 பேர் உயிரிழப்பு, 9 பேருக்கு சிகிச்சை

மகாராஷ்டிராவின் சாங்லி மாவட்டத்தில் உள்ள உரத் தொழிற்சாலையில் உள்ள உலை ஒன்று வெடித்து விஷவாயு கசிவு ஏற்பட்டதில் 2 பெண்கள் உட்பட 3 பேர் உயிரிந்தனர், 9 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாங்லி மாவட்டத்தில் உள்ள ஒரு ரசாயன நிறுவனத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதுகுறித்து கடேகான் பொலிஸ் நிலையத்தின் மூத்த ஆய்வாளர் சங்ராம் ஷெவாலே கூறுகையில்,

"உரத் தொழிற்சாலையில் உள்ள உலை வெடித்ததில் இரசாயண புகை வெளியேறியது. இந்த வாயு கசிவு காரணமாக அந்த உலை இருந்த பிரிவில் வேலை செய்து வந்த 12 பேர் பாதிக்கப்பட்டனர்.

அவர்கள் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் இரண்டு பெண்கள் மற்றும் காவலாளி ஆகிய மூன்று பேர் உயிரிழந்தனர். 9 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது." - என்றார்.

உர ஆலையில் இருந்து கசிந்தது அமோனியா வாயு என்று சந்தேகிக்கப்படுவதாக சாங்லி மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வாயுகசிவு விபத்தில் பாதிக்கப்பட்ட 7 பேர் கராட்டில் உள்ள சாக்யாத்ரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 5 பேர் அவசர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர்.

# இலங்கை சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 5 பேர் தாயகம் திரும்பினர்



இலங்கை சிறைகளில் இருந்து விடுதலை செய்யப்பட்ட 5 தமிழக மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு தாயகம் திரும்பினர்.

தொடர்ந்து 5 மீனவர்களும் தனி வாகனம் மூலம் இராமேஸ்வரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நேற்று அழைத்துச் செல்லப்பட்டனர்.

இராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மார்ச் 16 ஆம் திகதி கடலுக்குச் சென்ற ஆரோக்கிய சுகந்தன், இஸ்ரேல் ஆகியோருக்குச் சொந்தமான இரண்டு விசைப் படகுகளை நெடுந்தீவு அருகே இலங்கை கடற்படையினர் ரோந்துப் பணியின் போது கைப்பற்றி எல்லை தாண்டி மீன் பிடித்தாகக் கூறி படகில் இருந்த 21 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதில் அந்தோணி (வயது 50) என்ற மீனவர் இரண்டாவது முறையாக சிறைப்பிடிக்கப்பட்டதால் ஆறு மாதம் சிறை தண்டனை ஊர்காவல் நீதிமன்றதால் அளிக்கப்பட்டு, கொழும்பில் உள்ள வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

அவரது தண்டனை காலம் நிறைவடைந்ததை தொடர்ந்து விடுதலை செய்யப்பட்ட அந்தோணி மற்றும் நவம்பர் 12 ஆம் திகதி ஊர் காவல் துறை நீதிமன்றதால் விடுதலை செய்யப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் என மொத்தம் 5 பேரும் கொழும்பு விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு கடந்த வியாழக் கிழமை இரவு சென்னை சென்றடைந்தனர்.

தொடர்ந்து 5 மீனவர்களும் தனி வாகனம் மூலம் ராமேஸ்வரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நேற்று காலை அழைத்து செல்லப்பட்டனர் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




## மதுபான கொள்கை ஊழல் வழக்கு:

# அர்விந்த் கேஜ்ரிவால் மீதான விசாரணைக்கு தடை விதிக்க டில்லி உயர் நீதிமன்றம் மறுப்பு

மதுபான கொள்கை ஊழல் வழக்கில் டில்லி முன்னாள் முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் மீது சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு விசாரணைக்கு தடை விதிக்க டில்லி உயர் நீதிமன்றம் மறுத்துள்ளது.

மதுபான கொள்கை ஊழல் வழக்கு தொடர்பாக டில்லி முன்னாள் முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் மீது அமுலாக்கத்துறை தொடர்ந்த நிதி மோசடி வழக்கில் உச்ச நீதிமன்றம் கடந்த ஜூலை 12 ஆம் திகதி இடைக்கால பிணை வழங்கியது. சி.பி.ஐ. தொடர்ந்த வழக்கிலும் உச்ச நீதிமன்றம் கடந்த செப்டம்பர் 13 ஆம் திகதி கேஜ்ரிவாலுக்கு பிணை வழங்கியது.

இந்நிலையில் அர்விந்த் கேஜ்ரிவால் மீது சிறப்பு நீதிமன்றத்தில் அமுலாக்கத்துறை தாக்கல் செய்த குற்றப்பத்திரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கு விசாரணைக்கு தடை கோரி டில்லி உயர்நீதிமன்றத்தில் அர்விந்த் கேஜ்ரிவால் மனுத்தாக்கல் செய்தார்.

அதில், நான் அரசு ஊழியராக இருந்தபோது, என்மீது வழக்கு தொடர உரிய அனுமதி பெறவில்லை. அதனால் என் மீதான வழக்கை சிறப்பு நீதிமன்றம் விசாரிக்க தடை விதிக்க வேண்டும் என கூறியிருந்தார். ஆனால் இதற்கு தடை விதிக்க டில்லி உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது. மேலும், இது தொடர்பாக பதில் அளிக்கும்படி அமுலாக்கத்துறைக்கு டில்லி உயர்நீதிமன்ற நீதிபதி குமார் ஓரி உத்தரவிட்டார்.

இந்நிலையில் அமுலாக்கத்துறை சார்பில் ஆஜரான சொலிசிடர் ஜெனரல் துஷர் மேத்தா, அர்விந்த் கேஜ்ரிவால் மீது வழக்கு தொடர் அனுமதி பெறப்பட்டது என்றும் இது தொடர்பாக பதில் மனுவை தாக்கல் செய்வதாகவும் தெரிவித்தார். இதையடுத்து இந்த விசாரணை டிசம்பர் 20 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

# ரஷ்யா - உக்ரைன் போரை உலகப்போராக மாற்றுவதற்கு மேற்கத்திய நாடுகள் முயற்சி

## ஜனாதிபதி புடின் குற்றம் சாட்டுகின்றார்

ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரை உலகப் போராக மாற்ற மேற்கத்திய நாடுகள் முயற்சி செய்கின்றன என ரஷ்ய ஜனாதிபதி புடின் குற்றம் சாட்டியுள்ளார்.

ரஷ்யா – உக்ரைன் இடையே இடம்பெற்றுவரும் போரானது 1,000 நாள்களை கடந்து நீடித்து வருகின்றது. இந்நிலையில் உக்ரைனுக்கு பொருளாதார உதவிகள் மட்டுமின்றி, ஆயுதங்களையும் அமெரிக்கா வழங்கி வருகின்றது.

இப்போரில் ரஷ்யாவின் கை ஓங்குவதை தடுக்க, அந்த நாட்டுக்கு எதிராக நீண்ட தூரம் பயணித்து தாக்கும் திறன் உடைய ஏவுகணையை உக்ரைன் பயன்படுத்தலாம் என்று அமெரிக்கா சமீபத்தில் அனுமதி வழங்கியிருந்தது.

அதன்படி உக்ரைன் இராணுவமும், அமெரிக்கா மீது நீண்ட தொலைவு செல்லும் திறன் கொண்ட ஏவுகணைகளை வீசி தாக்கியது. இதற்கு பதிலடி தரும் வகையில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை ரஷ்யா முதல்முறையாக பயன்படுத்தியுள்ளது.

இந்நிலையில் ரஷ்ய ஜனாதிபதி புடின் கருத்து வெளியிடுகையில், இரு நாடுகளுக்கு இடையிலான போரை உலகப்போராக மாற்ற மேற்கத்திய நாடுகள் முயற்சி செய்கிறது எனவும், ரஷ்யா மீது தாக்குதல் நடத்த ஏவுகணைகளை



வழங்கும் நாடுகள் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ரஷ்யாவிற்கு எதிராக ஆயுதங்களைப் பயன்படுத்தும் நாடுகளின் இராணுவ வசதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்த ரஷ்யாவிற்கு உரிமை உண்டு எனவும் சர்வதேச பாதுகாப்பு அமைப்பை அழிப்பது ரஷ்யா அல்ல, அமெரிக்காதான் என்பதை மீண்டும் ஒருமுறை வலியுறுத்த விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.



## நிஜ்ஜார் கொலை விவகாரம்:

# பிரதமர் மோடியை தொடர்புபடுத்திய ஊடக செய்திக்கு கனடா அரசு மறுப்பு

காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை பற்றி பிரதமர் மோடி அறிந்திருந்தார் என்று கனடா நாட்டு ஊடகம் ஒன்று வெளியிட்ட செய்தி அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், அந்த செய்தியை கனடா அரசு மறுத்துள்ளது.

முன்னதாக, நிஜ்ஜாரை கொலை செய்ய இந்தியாவின் உள்துறை அமைச்சர் அமித் ஷா சதி திட்டம் தீட்டியதாக கூறி பெயர் வெளியிடாமல் பாதுகாப்பு அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கனடா ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

மேலும் அந்தச் செய்திகளில், "நிஜ்ஜார் கொலை சதி பற்றி இந்திய பிரதமர் மோடி, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலுக்குத் தெரியும். என்றாலும், இந்தக் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் ஆதாரம் எதுவும் கனடா அரசிடம் இல்லை." என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இதுகுறித்து கனடா அரசு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"ஒக்டோபர் 14 அன்று, பொது பாதுகாப்புக்கு குறிப்பிடத்தக்க மற்றும் தொடர்ந்து அச்சுறுத்தல் ஏற்பட்டதால், ராயல் கனேடியன் மவுன்டன் பொலிஸ் (ஆர்.சி.எம்.பி) மற்றும் அதன் அதிகாரிகள், கனடாவில் நிகழ்த்தப்பட்ட கடுமையான குற்றச் செயல்கள் குறித்து இந்திய அரசின் முகவர்களுக்கு தொடர்பு உண்டு என்ற பொது குற்றச்சாட்டினை முன்வைக்கும் அசாதாரண நடவடிக்கை எடுத்தது.

பிரதமர் மோடி, அமைச்சர் ஜெய்சங்கர், அஜித் தோவல் ஆகியோரை கனடாவுக்குள் நடந்த குற்றச் செயல்களுடன் தொடர்புபடுத்துவது குறித்து கனடா அரசு எதுவும் கூறவில்லை. அதற்கு ஆதாரங்களும் இல்லை. மற்றபடி ஊடகங்களில் வெளியான தகவல்கள் ஊகமானது, தவறானது." என்று தெரிவித்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிரிட்டிஷ் கொலம்பியாவின் சர்ரேயில் உள்ள ஒரு குருத்துவாராவுக்கு வெளியே வைத்து நிஜ்ஜார் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலை தொடர்பாக இந்த ஆண்டின் தொடக்கத்தில் நான்கு இந்தியர்கள் மீது குற்றம்சாட்டி, கனடா அதிகாரிகள் அவர்களைக் கைது செய்தனர்.

கனடா ஊடகங்களின் செய்திகளை கேலிக்குரியது எனக் கூறி ஆவேசமாக இந்தியா நிகராரித்திருந்தது, இதுபோன்ற செயல்கள் ஏற்கனவே பலவீனமாக இருக்கும் இருநாட்டு உறவுகளை மேலும் பாதிக்கும் என்று தெரிவித்திருந்தது. மேலும் இந்தக் குற்றச்சாட்டு அபத்தமானது மற்றும் உள்நோக்கம் கொண்டது என்று தெரிவித்தது. காலிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகளுக்கு கனடா ஆதரவு தருவதாகவும் குற்றம்சாட்டி வருகிறது.

இதனிடையே, கனடாவிலிருந்து இந்தியாவுக்கு செல்லும் பயணிகளுக்கு விதிக்கப்பட்ட கூடுதல் "ஸ்கிரீனிங்" நடவடிக்கைகளை கனடா அரசு திரும்ப பெற்றிருப்பதாக சி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது. நிஜ்ஜார் கொலை தொடர்பாக கனடாவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என்றாலும் புதிய நெறிமுறைகளை நீக்குவதற்கான காரணங்களை கனடா அரசு தெரிவிக்கவில்லை.







# ஒரே நோக்கத்துடன் உழைத்து, தாய்நாட்டை சிறந்த நாடாக மாற்ற அர்ப்பணிப்போம்

## பாதுகாப்பு அமைச்சராக பதவியேற்ற ஜனாதிபதி தெரிவிப்பு

"தாய்நாட்டை சிறந்த நாடாக மாற்றுவதற்கு ஒன்றிணைந்து செயற்படுமாறு அனைத்து அரச ஊழியர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றேன்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

அக்குரேகொட பாதுகாப்பு படைத் தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சில் பாதுகாப்பு அமைச்சராக நேற்று முற்பகல் கடமைகளைப் பொறுப்பேற்ற போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு அங்கிருந்த ஊழியர்களினால் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய செயற்பாடுகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் முப்படைகளின் தளபதிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் பிரதானிகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

சிறந்த ஆட்சியை உருவாக்குவதற்காக புதிய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும், நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தில் அனைவரினதும் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசமைப்பிலும் சட்டங்களிலும் எத்தகைய சட்ட ஒழுங்குகள் இருந்தாலும் மக்களின் அதிகாரம் தான் பலமாக உள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் வழங்கப்பட்ட ஆணைகளின் கட்டமைப்பு மற்றும் வடிவங்களைப் பார்க்கும் போது அவர்களின் எதிர்பார்ப்புகள் பிரதிபலிக்கின்றன. இந்த மாற்றம் அவர்களினதும் எதிர்பார்ப்பு என்பது அண்மைக்கால தேர்தல் வரலாற்றில் அரச சேவையினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட சுமார் 80 வீத ஆணை எடுத்துக்காட்டுகிறது,

எனவே, தமது அரசாங்கத்திற்கு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்குவதைத் தவிர வேறு எந்த நோக்கமும் இல்லை. அதனை நனவாக்க அரச ஊழியர்களின் ஆதரவு அவசியம்.

அனைவரும் எதிர்பார்க்கும் இந்தப் புதிய மாற்றத்தில், அரச சேவையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தாமல் முன்னேற முடியாது. வளர்ச்சியடைந்த ஒவ்வொரு நாட்டிலும் பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு பாய்ச்சலை ஏற்படுத்தியது அரச சேவைதான்." – என்றார்.

இந்த நிகழ்வில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) அருண ஜயசேகர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்யகொண்தா, பாதுகாப்புப் பதவிநிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா பாதுகாப்பு படை உறுப்பினர்கள், பாதுகாப்பு அமைச்சின் ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.











# மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் அரசை உருவாக்க அர்ப்பணிக்க வேண்டும்

## நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக பதவியேற்ற ஜனாதிபதி தெரிவிப்பு

“மக்கள் ஆணைக்கும் பொது மக்கள் கொண்டிருக்கும் எதிர்பார்ப்புக்களை தற்போதைய அரசாங்கம் நிறைவேற்றத் தவறினால் நம்பிக்கையான எதிர்கால தொடர்பில் மக்கள் காணும் கனவுகளும் பொய்யாகிவிடும். மக்களின் எதிர் பார்ப்புகளை நிறைவேற்றும் அரசாங்கத்தை உருவாக்க அரச ஊழியர்கள் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.”

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித் தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, நிதி மற்றும் பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சராக நேற்று பதவியேற்ற தன் பின்னர் அமைச்சின் பணிக்குழாம் முன்னிலையில் ஆற்றிய உரையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அமைச்சுக்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு பணியா ளர்கள் அன்புடன் வரவேற்பளித்தனர்.

கடந்த காலத்தில் பொருளாதார வீழ்ச்சிக்கு முகங்கொடுத்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு நிதியமைச்சின் அதிகாரிகள் வழங்கிய பங்களிப்பை நன்றியுடன் பாராட்டிய ஜனாதிபதி, எதிர்கால இலக்குகளை அடைவதற்கு அனைவரினதும் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க,

“அரசியல் மாற்றங்களின் போது அரச ஊழியர்களை முன்னைய செயற்பாடுகளை கருத்தில் கொண்டு மதிப் பீடு செய்த வரலாறுகள் உண்டு. ஆனால் இனிவரும் காலங்களில் அரச ஊழியர்கள் ஆற்றப்போகும் பணியே அவர்களை மதிப்பீடு செய்யும் காரணியாக இருக்கும். அரச ஊழியர்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் ஏதேனும் அநீதி அல்லது தவறுகள் இடம்பெற்றால் அவர்களுக்காக முன்னிலையாவேன்.

வருமானம் ஈட்டும் திணைக்களங்கள் தொடர்பில் மக்களிடம் நல்ல விம்பம் இல்லை. அந்த நிலைப்பாட்டினை மாற்றுவது கடினமானது என்ற போதிலும், தம்மைப் பற்றி ஏதேனும் மோசமான விம்பம் இருக்குமாயின், புதிய அரசாங்கத்தின் கீழ் அந்த அனைத்து அதிகாரிகளும் தம்மைப் பற்றிய விம் பங்களை மாற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள் ளது.

ஊடகங்களுக்கு முன்பாக அதிகாரிகளை அச்சுறுத்து வது, அவர்களின் கருத்துக்களைப் புறக்கணிப்பது போன்ற செயற்பாடுகள் தமது அரசாங்கத்தின் கொள்கையல்ல. சுய ஒழுக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை உருவாக்குவதே புதிய மாற்றத்தின் அணுகுமுறையாக அமையும். அதற்காக ஒன்றுபடுமாறு அனைத்து அரசாங்க அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.” – என்றார்.

இந்நிகழ்வில் பிரதி அமைச்சர்களான பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநா யக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோரும் கலந்துகொண்டனர்.











# குறைந்த காற்றழுத்த தாழ்வு நாளை உருவாகலாம்

தென்கிழக்கு வங்காள விரிகுடா பகுதியில் நாளை குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அது, அடுத்து வரும் 2 நாள்களில் காற்றழுத்தமாக விருத்தியடையும் என அந்த திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அத்துடன், மேல், சபரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும்.

அத்துடன், வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதேவேளை, மன்னாரிலிருந்து காங்கேசன்துறை, மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களில் காற்றானது மணித்தியாலத்துக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் அதிகரித்து வீசக்கூடும்.

இதன்காரணமாக, குறித்த பகுதிகளுக்கு மறுஅறிவித்தல் வரை செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நான்கு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு





யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து சுயேட்சையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராகக் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

சிவில் செயற்பாட்டாளர்கள் சிலர் இந்த முறைப்பாட்டை முன்வைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் கூடிய நாடாளுமன்ற கூட்டத்தொடரில் பங்கேற்றிருந்த வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா எதிர்க்கட்சி தலைவரின் ஆசனத்தில் அமர்த்திருந்தார்.

இதன்போது நாடாளுமன்ற பாதுகாப்பு அதிகாரிகள் அவரை வேறு ஆசனமொன்றில் அமருமாறு கோரிய நிலையில் அதற்கு வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா மறுப்பு தெரிவித்திருந்ததுடன், அது தொடர்பான காணொலியை தமது சமூக வலைத்தள பக்கத்தில் அவர் பதிவிட்டிருந்தார்.

அதேநேரம் நாடாளுமன்ற அமர்வு நடவடிக்கைகளைத் தொடர்ந்து வெளியிட்டிருந்த மற்றுமொரு காணொலியில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனை தமது இறைவனாகக் கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில் இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியபிரமாணம் செய்து கொண்ட அவர், அரசமைப்புக்கு முரணான கருத்துக்களை முன்வைத்துள்ளதாகத் தெரிவித்துக் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா, இனவாத கருத்துக்களை வெளியிட்டுள்ளதாகவும் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளதாக சிவில் செயற்பாட்டாளர்களான சட்டத்தரணி யலித் விஜேசுரேந்தர மற்றும் குணரத்ன அதிகாரி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

# திகாமடுல்ல மாவட்ட வாக்குகள் மீளவும் எண்ணப்பட வேண்டும்!

## தேர்தல் ஆணையத்தில் அதாஉல்லா மகஜர்








**(நூருல் ஹுதா உமர்)**

கடந்த பொதுத் தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் புதிய ஜனநாயக முன்னணியின் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட தேசிய காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் நிர்வாகிகள் நேற்று தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்திற்குச் சென்று நடந்து முடிந்த பொதுத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் அடங்கிய மனுவொன்றை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்கள்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள தேசிய காங்கிரஸ் நிர்வாகிகள், திகாமடுல்ல மாவட்டத்தின் வாக்குகள் மீள எண்ணப்பட வேண்டும் என்பதையும் கடந்த தேர்தல் காலத்தில் தேசிய காங்கிரஸ் தலைவரான முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லாவைக் குறிவைத்து பின்னப்பட்ட பல நகர்வுகளையும் இடையூறுகளையும் உள்ளடக்கிய பல்வேறு விடயங்கள் இம்மனுவில் விஷேடமாக உள்ளடக்கப்பட்டு இருந்தன என்று தெரிவித்தனர்.

மேலும், நியாயத்திற்காக எப்போதும் குரல் கொடுக்கும் தேசிய காங்கிரஸ் இது தொடர்பான விரிவான விளக்கங்களை மிக விரைவில் மக்கள் முன்றில் சமர்ப்பித்து அதன் அரசியல் போராட்டத்தை தொடரும் என்றனர்.

இந்த முறைப்பாட்டின் போது தேசிய காங்கிரஸின் பிரதித் தலைவர் டாக்டர் ஏ. உதுமாலெப்பை, பொருளாளர் ஜே.எம். வஸீர், சட்டத்தரணி மர்சூம் மௌலானா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# மினுவாங்கொட கொள்ளையர்கள் யாழ்ப்பாணத்தில் தலைமறைவாம்!





**(த.சுபேசன்)**

கடந்த 18ஆம் தேதி மினுவாங்கொட பகுதியில் ஏழரைக் கோடி பணத்தை கொள்ளையடித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவர் யாழ்ப்பாணத்தில் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களை அடையாளம் காட்ட உதவுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மினுவாங்கொட கொள்ளைச் சம்பவத்துடன் மூவர் தொடர்புபட்டுள்ள நிலையில் அவர்களில் ஒருவர் கைதாகியுள்ள போதிலும் மேலும் இருவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து தலைமறைவாகியிருக்கின்றனர் என்று கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் அவர்களின் படங்களை வெளியிட்டு பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

மேற்படி கொள்ளைச் சந்தேக நபர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தால் 0718591332 என்ற தனது தொலைபேசி இலக்கத்திற்கு உடனடியாக அறிவிக்குமாறு யாழ் மாவட்ட உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ஜெரூல் கேட்டுக்கொண்டுள்ளார்.




# ‘துயரங்களுக்கு வன்முறைகள் பதிலாகாது’

# மன்னார் மருத்துவமனை ஊழியர்கள் விசனம்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

“துயரங்களுக்கு வன்முறைகள் பதிலாகாது“ என்ற தலைப்பில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் திட்டமிட்டு தோற்றுவிக்கப்பட்ட அவசர நிலை குறித்து மன்னார் வைத்தியசாலை பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், துணை மருத்துவ உத்தியோகத்தர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள், நோயாளர் காவு வண்டி சாரதிகள், தொழில்நுட்ப உதவியாளர்கள் இணைந்து நேற்றிய தினம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டவை வருமாறு:–

ஓர் இழப்பென்பது எந்தவிதத்திலும் தாங்க முடியாதது. காரண காரியங்கள் இருந்தாலும் அந்த இழப்பு எல்லோர் மனதையும் புண்படுத்தக் கூடியது.

ஓர் ஆரோக்கியமான சமூகம் அந்த இழப்பிற்குரிய குடும்பத்துக்கு ஆதரவாக இருந்து அவர்கள் அதிலிருந்து மீண்டு வரவும், ஏதும் பிழைகள் நிரூபிக்கப்பட்டு இருந்தால் அதற்குரிய நடவடிக்கைகளை முன் னெடுப்பதற்கும் உதவ வேண்டும். ஜனநாயக நாட்டில் அனைவருக்கும் போராடும் உரிமை உண்டு. ஆனால் எந்தப் போராட்டமும் அமைதியானதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் ஏனையவர்களை துன்புறுத்தாததாகவும் இருக்க வேண்டும்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் நடந்த தாய், சேய் மரணமானது சுகாதார அமைச்சினால் உடனடியாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஒரு விடயம். அதை முழு மூச்சாக செய்ய மக்கள் போராடுவது அவர்களது உரிமை. வைத்தியசாலை ஊழியர்கள் அந்த சோகத்தோடு அதிர்ச்சியில் இருந்த வேளை வைத்திய சாலையை சுற்றி ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் நடந்த அசௌகரியமான சம்பவம் பின்வரும் கவலைக்கிடமான நிலைமைகளுக்கு வழிகோலி விட்டுள்ளது.

1.வைத்தியசாலை பணிகளுக்கும் மருத்துவ கடமைகளுக்குமான இடையூறுகள் வருமாறு:–

பிரசவ அறையை சுற்றி நடந்தது:–

ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் பிரசவ அறைக்குள் நுழைந்து பிரசவித்து கொண்டிருந்த இன்னொரு தாயின் அந்தரங்கத்தையும் அவருக்குரிய சேவையும் சீர் குலைத்தது.

பிரசவத்திற்காக பிரசவ அறைக்கு வர இருந்த இன்னுமோர் தாயை இந்த கூட்டம் பாதையை வழி மறித்து நின்றதால் அவரை ஸ்கான் அறையில் வைத்துப் பிரசவம் பார்த்த துர்ப்பாக்கிய நிலை. இது அந்தத் தாயையும் சேயையும் ஆபத்துக்குள்ளாயிருக்க கூடும்.

சிசேரியன் சத்திர சிகிச்சை முடித்து விட்டு விடுதிக்கு கொண்டு வர இருந்த இன்னொரு தாயை விடுதிக்கு கொண்டு வந்து கவனிக்க விடாமல் இந்த குழுவால் அசம்பாவிதம் ஏற்பட்டது.

அன்றே இரட்டை குழந்தை பெற இருந்த இன்னொரு தாய் இந்த கலவரத்தை கண்டு பயந்து இவர்களால் விடுதி சூறையாடப் படலாம் எனப் பயந்து விடுதியை விட்டு அத்தியாவசியமான மருத்துவ கண்காணிப்பையும் மீறி வீடு செல்ல முற்பட்டமை.

அவசர சிசேரியன் சத்திர சிகிச்சை செய்ய சத்திர சிகிச்சை கூடத்திற்குச் சென்று கொண்டிருந்த வைத்தியரை வழி மறித்து தாக்க முயன்றமை. இதனூடாக இன்னொரு தாயின் உயிரை பணயம் வைக்க முற்பட்டமை.

Preeclampsia எனும் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய நிலைமையுடன் அவசர சிகிச்சைக்காக வந்த கர்ப்பிணி தாயை பார்க்க சென்ற வைத்தியரை அச்சுறுத்தி அந்த தாயை ஆபத்துக்கு தள்ள முயன்றமை.

A&E எனப்படும் அவசர சிகிச்சை பகுதியில் நடந்தவை:–

உலகத்தில் எந்த ஒரு சூழ்நிலையிலும் யுத்தத்தின் போதும் மதிப்பளிகின்ற நோயாளர் காவு வண்டியை வழி மறுத்து சேதப்படுத்த முயன்று மேலதிக சிகிச்சை பெற இருந்த நோயாளிகளை இன்னலுக்குள்ளாக்கியது.

அவசர நிலமைகள், உயிராபத்து நிலமைகளுடன் கூடிய நோயளர்கள் அவசர வைத்திய சிகிச்சையை நாட விடாமல் தடுத்தமை மூலம் சின்னம் சிறுவர்கள் உட்பட வேறு பல உயிர்களும் காவு கொள்ளப்படும் நிலை தோன்றியிருக்கும்.

2.வைத்தியசாலை ஊழியர்களின் பாதுகாப்பு கவலைக்கிடமாகியமை:–

மகப்பேற்று விடுதி தாதியர்கள் குடும்ப நல உத்தியோகத்தர்கள் அவர்களின் பெயர்கள் சொல்லி அழைக்கப்பட்டு “வெளியே வாருங்கள், உங்களை கொல்வோம்“ என்று உயிராபத்து அச்சுறுத்தல் விடுத்தமை.

அம்புலன் உதவியாளர் ஒருவரைத் தாக்குவதற்கு துரத்தி கொண்டு ஓடியமை.

பாதுகாப்பு ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை.

கடமையிலிருந்த வைத்தியர், தாதியர்களை அடாத்தாக புகைப்படம் எடுத்து தகாத வார்த்தைகளால் அச்சுறுத்தி கொலை மிரட்டல் விடுத்தமை.

கடமையில் இருந்த வைத்தியரை கடமையில் இருக்க விடாமல் வெளியே துரத்திப் பய முறுத்தியமை.

தொலைபேசி பரிவர்த்தனை நிலைய ஊழியர்களுக்கு அழைப்புகளை எடுத்துத் தகாத வார்த்தைகளால் திட்டியமை.

வைத்தியசாலை, பணிப்பாளரின் கௌரவத்தை தனிப்பட்ட ரீதியில் தாக்க முற்படுவது.

மக்களின்,விலை மதிப்பற்ற அரச உடைமைகளை நாசம் செய்ய முற்பட்டமை.

பிரசவ அறையின் கண்ணாடியை உடைத்தமை.

பல மில்லியன் பெறுமதியான மினிட்டர்களைத் தூக்கி போட்டு உடைக்க முயன்றமை. (அவை ஊழியர்களால் தடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டன)

நோயாளர் கட்டில்கள் வேறு பல உடைமைகளை சேதமாக்க முற்பட்டமை.

அங்கீகரிக்கப்படாத அரசியல் தலையீடுகள்:

தன்னை ஒரு கட்சியின் உறுப்பினர் என அடையாளப்படுத்திய ஒருவர் வைத்

தொடர்ச்சி ▼

# ‘துயரங்களுக்கு வன்முறைகள் பதிலாகாது’
# மன்னார் மருத்துவமனை ஊழியர்கள் விசனம்

தொடர்ச்சி▲

திய ஊழியர்களை மிரட்டி அநாகரிக மான முறையில் வாக்குமூலங்களைக் கோரியிருந்தார்.

இன்னொரு அரசியல் கட்சி உறுப்பினர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட விபத்துக்கள் மற்றும் அவசர சேவை பிரிவு விடுதி என்பவற்றில் மற்றைய நோயாளிகளின, ஊழியர்களின் Privacy கருத்தில் எடுக்காமல் ஒலிப் பதிவுகளை எடுத்து சமூக வலைதளங்களில் வெளியிட்டிருந்தார். அவை மக்களை பிழையான வழியில் தூண்டு பவையாக இருந்தன.

பிற அரசியல் வாதிகளும் உண்மை நிலைவரங்களை ஆராய்ந்து மக்களை தெளிவுபடுத்தாமல் பிழையான வார்த்தைப் பிரயோகங்கள் உடன் மக்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பை தூண்டும் வகையில் பதிவுகள் இருகின்றமை.

இவ்வாறான கவலைக்கிடமான சம்பவங்களின் விளைவுகளாக வைத்தியசாலையின் ஒட்டுமொத்த ஊழியர்களுமே மனமுடைந்து செயலற்றுப் போயிருக்கிறோம்.

நீங்கள் அறிந்தது போல வைத்திய சேவையை தரும் சேவையாளர்கள் சமப்பட்ட மனநிலை இருக்க வேண்டும் என்பது நியதி.

அவ்வாறு இல்லாவிட்டால் சேவை தளத்தில் உறுதியிராது. தற்சமயம் மேற்கண்ட சம்பவங்களால் ஒரு வினை திறனான சேவை அல்லது மேலும் தரத்தை மேம்படுத்த முடியாத மனச் சுமையான நிலமைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

எல்லாவற்றிக்கும் மேலாக தென் பகுதியில் இருந்து கடமைக்கு வரும் வைத்தியர்கள், தாதியர்கள் தங்களது பாதுகாப்பின்மையை உணர்கின்றார்கள். இந்த நிலமை பொருத்தமற்ற விளைவுகளை ஏற்படுத்தலாம்.

இந்த நிலை மாறி இவ்வாறான ஏற்றுக்கொள்ள முடியாத நடவடிக்கைகளை விடுத்து எங்களை நாங்களே ஆசுவாசப்படுத்தி சேவையை தொடர மன்னார் மாவட்ட மக்களாகிய உங்கள் பங்களிப்பை எதிர்பார்த்தபடி நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

தாய் – சேய் இறப்புக்கான காரணங்கள் நடுநிலையாக ஆராயப்பட்டு மக்களுக்கு தெரியப்படுத்தப்படும். அதற்குரிய முழு ஒத்துழைப்பையும் நாங்கள் வழங்கி கொண்டிருக்கிறோம். – என குறித்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# தன் உயிரைப் பாதுகாக்க வடக்கை விட்டு இடமாற்றம்
# கோருகிறார் மன்னார் வைத்திய அத்தியட்சகர் ஹனிபா

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

தனது உயிரைப்பாதுகாக்கத்தன்னை உடனடியாக வடக்கில் இருந்து இடமாற்றம் செய்யக் கோரி மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஆசாத் எம்.ஹனிபா மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரிடம் உருக்கமான கோரிக்கையை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மத்திய சுகாதார அமைச்சின் செயலாளருக்கு நேற்றைய தினம் அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.


மாவட்ட பொது வைத்தியசாலை-மன்னார்
DISTRICT GENERAL HOSPITAL - MANNAR



அந்தஜ் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளமை வருமாறு:–

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வைத்திய அத்தியட்சகராக நான் நியமிக்கப் பட்டதில் இருந்து பல சுகாதார தர மேம்பாடுகள் மற்றும் நோயாளிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல் படுத்துவதன் மூலம் சுகாதார சேவைகளை மேம்படுத்த என்னை அர்ப்பணித்து வந்துள்ளேன்.

எனினும் கடந்த 19 ஆம் திகதி மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் துரதிர்ஷ்டவசமான கரு மகப்பேறு மரணம் நிகழ்ந்துள்ளது.

அந்தத் தாய் மற்றும் சிசுவின் மரணம் தொடர்பாக உரிய நடவடிக்கையை முன்னெடுத்து வந்தேன்.

எனினும் மகப்பேற்று விடுதியில் புகுந்த கும்பல் பிரசவ அறைக்குள் நுழைந்து மருத்துவமனையின் சொத்துக்களைச் சேதப்படுத்தியது.

நான் அங்கு சென்ற போது நிலைமை குறித்து விவாதிக்கவும், வருகை தந்த கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும் காவல்துறை அதிகாரிகளின் உதவியை நாடினேன்.

எனினும் அவர்கள் என்னை தனிப்பட்ட முறையில் குறி வைத்து சரமாரியாக தாக்க முயன்றனர். அவர்கள் என்னை கொலையாளி என்று கூறி கூச்சலிட்டனர். அவர்களில் சிலர் என்னைத் தாக்க முயன்றனர்.

அதனைத் தொடர்ந்து 20 ஆம் திகதி புதன்கிழமை அன்று மாவட்டச் செயலாளர், வடமாகாணசுகாதாரஅமைச்சின் செயலாளர், மத்திய சுகாதார அமைச்சின் பிரதி நிதிகள் மற்றும் மதத் தலைவர்களுடன் மேற்கண்ட மரணம் தொடர்பாக சுகாதார அமைச்சகம் எடுத்த நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்தோம்.

இதற்கிடையில் அன்றைய தினம் மாலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் நுழைவாயிலை முற்றுகையிட்டு ஒரு பெரிய கூட்டம் அங்கு அவசர சிகிச்சை பிரிவு மற்றும் வெளி நோயாளர் பிரிவுக்குள் நுழைந்து அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில்ஈடுபட்டவர்கள்மன்னார் மாவட்டச் செயலாளர், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரிடம் என்னை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

நான் எனது குடியிருப்பில் இருந்து 355 கிலோ மீட்டர் தொலைவில் இருந்து பயணிப்பதால் இது எனக்கு கடுமையான உயிருக்கு ஆபத்தான எச்சரிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

எனக்கு எதிரான தனிப்பட்ட முறையில் சமூக ஊடகங்களில் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் எனக்கு எதிரான பிரச்சாரங்கள் பொது கிளர்ச்சி மற்றும் அமைதியின்மையை தொடர்ந்து கொண்டிருக்கிறது. எனவே எனக்கு வட மாகாணத்தில் பாதுகாப்பற்ற பணிச் சூழல் எனக்கு ஏற்பட்டுள்ளது.

தயவு செய்து எனது பாதுகாப்பை உறுதி செய்வதற்காக என்னை அவசரமாக வடக்கு மாகாணத்திற்கு வெளியே மாற்ற நடவடிக்கை எடுக்கவும்.

எனக்கு எதிராக விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் குறித்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளேன். – என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# 'வட போச்சே!....'

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்



**கேள்வி: நீர் இவ்வளவு தூரம் 'ஜக்' அடித்தும் சுமந்திரன் கடைசியில் தோற்றுவிட்டாரே?**

பதில்: சுமந்திரன் எங்கே தோற்றார்? யாழ்ப்பாணம் அல்லவா தோற்றுவிட்டது.

♦♦♦♦♦♦♦♦♦

**கேள்வி: மற்றைய அணிகளைக் கூட்டமைப்பிலிருந்து பிரித்து அனுப்பி விட்டு, தமிழரசுக் கட்சியைத் தனிக்கச் செய்ததுதான் சுமந்திரனின் பிழையென்று இப்போதாவது ஒத்துக்கொள்கிறீரா?**

பதில்: முதலில் நீங்கள் ஒன்றை விளங்கிக் கொள்ளுங்கள். அரசியலில், தான் சார்ந்த அணியை வெல்லச் செய்வதுதான் ஒருவரது முதற்கடமை. அக் கடமையை சுமந்திரன், மிகச் சரியாகச் செய்து முடித்திருக்கிறார். எப்படியென்று தெளிவாகச் சொல்லுகின்றேன்.

புலிகளின் கட்டாயத்தின் பெயரில்தான் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அவ்வுருவாக்கம், பல அணிகளுக்கும் மறுவாழ்வு தந்த செயலாய் அமைந்து போயிற்று. ஆனந்தமாகக் கைநீட்டி முதலில் தமிழர் விடுதலைக் கூட்டணியையும், பின்னர் ஆனந்தசங்கரி விலகிப்போக, தமிழரசுக் கட்சியையும் அவர்கள் இறுகப்பற்றிக் கொண்டார்கள். (எனது முந்தைய கட்டுரையை வாசித்துத் திருத்தம் சொன்னவர்களுக்கு நன்றி).

பல தசாப்தங்களாய் தமிழ் மக்களின் அரசியல் சக்தியாய் இருந்துவந்த, தமிழரசுக்கட்சியுடன் இணைவதால் வரப்போகின்ற வாய்ப்பை எண்ணி, அவர்கள் மகிழ்ந்தது உண்மை. உதயசூரியனைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் தேர்தற் சின்னமான வீடு, கூட்டமைப்பின் தேர்தற் சின்னமாக, அது அவர்களுக்கு இன்னும் வாய்ப்பாகப் போயிற்று.

தேர்தலில் வெற்றி பெற்று, நாடாளுமன்றினுள் ஆனந்தமாக நுழைந்தார்கள். பதவி அவர்களைப் பற்றிக் கொண்டது. கூட்டமைப்பை முன்வைத்து தமிழரசுக் கட்சியோடு ஒன்றினால்தான், தமது எதிர்கால வாழ்வு நிலைக்குமென நினைந்த அவர்கள், கூட்டமைப்பைத் தனிக்கட்சியாகப் பதிவு செய்ய வேண்டுமென, முதலில் பிரச்சினை கிளப்பினார்கள்.

சம்பந்தர் அதற்கு உடன்பட மறுத்துவிட்டார். தமிழரசுக் கட்சி தனித்துச் சென்று விட்டால், தமது சாம்ராச்சியம் எந்தநேரத்திலும் சரிந்து விடலாம் என்ற அச்சத்தோடு மௌனித்திருந்த இவர்களுக்கு, சம்பந்தனாரின் பிழையான தேர்வால், தமிழரசுக் கட்சிக்குள் நுழைந்த, முன்னாள் முதலமைச்சர் நிழல் தரும் 'விஷ' விருட்சமானார்.

இவர்களின் கூட்டிற்தான், "தமிழ் மக்கள் பேரவை' இரகசிய, இரகசியமாகப் பூட்டிய கதவுக்குள் உருவாக்கப்பட்டது. தாய்க் கட்சியாகிய தமிழரசுக் கட்சியை மட்டும் ஒதுக்கி விட்டு, இக் கூட்டம் நடாத்தப்பட்டது.

அரசியல் சார்பற்றவர் போலத் தம்மைக் காட்டிக் கொண்ட நீதியரசரிடம், தமிழரசுக் கட்சியை ஏன் கூட்டத்திற்கு அழைக்கவில்லை எனக் கேட்ட போது அவர், "மாவையின்" தொலைபேசி இலக்கம் தன்னிடம் இருக்கவில்லை எனக் கூறி, "முழுப்பூசனிக்காயைச் சோற்றில் மறைத்தார்".

நீதியரசரின் பதவி, தோற்றம் என்பவற்றால் மயங்கிப் போன எம் மக்களும், நிஜத்தை ஆராயாமல், அந்தக் குழுவினரை நம்பி தமிழரசுக் கட்சியை வெறுக்கத் தலைப்பட்டார்கள். அக் காலத்தில் சம்பந்தரின் நம்பிக்கைக்குரியவராய்ச் செயற்பட்ட சுமந்திரன் மேல் அவ்வெறுப்பு முழுமையாய்ப் பதிவானது. அதுதான் நடந்த கதை.

தாம் பலவீனராய் இருந்து கொண்டு பலமான ஒரு கட்சியின் "மூக்கில் தொட நினைந்த" அம் மாற்றுக் கட்சிகளையும், அவர்களுக்குத் துணைநின்ற நீதியரசரையும்(?) அப்புறப்படுத்த வேண்டியது, கட்சியை வழிப்படுத்திக் கொண்டிருந்த சுமந்திரனது கடமையாயிற்று. அதனைத்தான் அவர் செய்தார்.

அச் செயலின் மூலம், அவர் தான் சார்ந்த கட்சியைப் பலப்படுத்தியமையை இம்முறை தேர்தல் முடிவுகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. முரண்பாடுகள் வந்த பின்பு, மற்றைய அணிகளோடு கூடியிருந்து, சென்ற தேர்தலிற் பெற்ற "ஆறு" ஆசனங்களை, இம்முறை தனித்து நின்று "எட்டு" ஆசனங்களாய் தமிழரசுக் கட்சி உயர்த்திருக்கிறது.

யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி▲

களப்பு (3), அம்பாறை எனத் தமிழர் வாழ் பிரதேசங்கள் அனைத்திலும் இடங்களைப் பிடித்து, முழுத் தமிழ் மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே கட்சியாக, தமிழரசுக் கட்சியைத் தலைநிமிரச் செய்திருக்கிறார் சுமந்திரன்.

அதுமட்டும் அல்லாமல், சுயநலத்தால் தனித்துச் சென்ற பெரும்பான்மையோர் அடைந்திருக்கும் தோல்வியும், சுமந்திரனது தீர்க்க தரிசனத்தை உறுதி செய்திருக்கின்றது.

சுமந்திரனின் மேற்சொன்ன அதிரடிச் செயல்களால் ஏற்பட்ட பகைவர்களும், தாய் மண்ணில் தம் இஷ்டப்படி வலைவிரித்துப் பயன்பெற முடியாது போன, சில "டயஸ்போராக்களும்", தம் சுயநலம் நோக்கி உட்கட்சிக்குள்ளேயே கோளாறுகள் செய்த சில "குள்ளநரிகளும்" செய்த பிரசாரத்திற்கு ஆட்பட்டு, சரி பிழைகளை ஆராய்ந்து அறிய முடியாத நம்மின மக்களால், தேர்தலில் சுமந்திரன் தோற்கடிக்கப்பட்டுள்ளார்.

இதனை தோல்வி என்று நான் சொல்ல மாட்டேன். புலிகளையும் இப்படித்தான் பல பேரும் ஒன்று சேர்ந்து வீழ்த்தினார்கள். ஆனால் அந்த வீழ்ச்சியை நியாயமானது என யாரும் சொல்லத் துணிய மாட்டார்கள். அது போன்ற ஒன்றுதான் சுமந்திரனுக்கும் நடந்திருக்கிறது.

சுமந்திரன் தேர்தலில் தோற்றிருக்கலாம். ஆனால், அவரது முயற்சியால் தமிழரசுக் கட்சி வெற்றி பெற்றிப்பதை யாரும் மறுக்க முடியாது.

♦♦♦♦♦♦♦♦♦

**கேள்வி: சுமந்திரன் செய்த பெரிய பிழையென எதனைக் கருதுகிறீர்கள்?**

பதில்: சில காலம், சம்பந்தரின் கைப்பொம்மையாக இயங்கியமைதான் அவர் செய்த பெரிய பிழை. தன்னை வலிந்து அரசியலுக்கு அழைத்து வந்த நன்றியைப்



பாராட்ட நினைந்ததால் வந்த தவறு அது. நினைத்திருந்தால் அவரும் முன்னாள் முதலமைச்சரைப் போலப் பதவி கிடைத்ததும், நன்றி மறந்து "சூதும், வாதும்" செய்திருக்கலாம். அதனைச் செய்யாமல் விட்டதுதான் அவரது குற்றமாய்ப் போயிற்று. நம் மக்களுக்கும் பொய்யானவர்களைத்தான் அதிகம் பிடிக்கின்றது போல!

சம்பந்தர், சுமந்திரனைக் கொண்டு தன் காரியங்களை நிறைவேற்றி விட்டு, அதனால் வந்த பரிசில்களைத் தான் ஏற்று, பழிகளைச் சுமந்திரன் தலையில் ஏற்றினார். அதற்கு உடன்பட்டதே சுமந்திரன் செய்த குற்றம். முடிவெடுக்கும் பதவியை வாங்கிக் கொண்டு, முடிவுகளுக்கு அவர் பொறுப்பேற்றிருக்க வேண்டும். அப்படிச் செய்யாததால்தான் சுமந்திரனின் செயல்களில் மக்களுக்கு வெறுப்பு உண்டாயிற்று.

♦♦♦♦♦♦♦♦♦

**கேள்வி : யாழில் ஜே.வி.பி.க்கு மூன்று சீற்றுக்களை வழங்கியிருக்கும், யாழ் மக்களின் செயல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்: இச் செயலுக்காக யாழ் தமிழ் மக்கள் பின்னாளில் கவலைப்படப் போகிறார்கள்! அரசமைப்புச் சட்டத்திருத்தத்தைக் கொண்டுவரப் போவதாக ஜே.வி.பி. அறிவித்திருக்கிறது. அதில் தமிழ் மக்களுக்கு வரவேண்டிய உரிமைகளைக் கோரிப் பெறப்போவது யார்? கேள்வி எழுந்திருக்கிறது.

யாழில் இருந்து தேர்தெடுக்கப்பட்ட ஜே.வி.பி. தமிழ் உறுப்பினர்கள் அவற்றைப் போராடிப் பெறுவார்கள் என்கின்றனர் சிலர். அவர்களுக்கு ஓர் உண்மை தெரியவில்லை. ஜே.வி.பி. கட்சி மிகச் சீராகக் கட்டமைக்கப்பட்ட ஒன்று. வெளியே சொல்லப்படாவிட்டாலும், இறுதி முடிவுகளை எடுப்பதற்கான ஒரு "பொலிட்பீரோ" அங்கிருப்பதாகப் பலரும் சொல்கிறார்கள். அந்த "பொலிட்பீரோவை" மீறி அங்கு எவரும் எதுவும் செய்ய முடியாதாம்.

வருங்காலத்தில் ஜே.வி.பி. பல தடைகளைத் தாண்டிப் பயணிக்க வேண்டியிருக்கப் போகிறது. இவர்களது கொள்கையாகிய "கொம்யூனிஸத்தை" ஏற்காத அமெரிக்காவும், இந்தியாவும் நீட்டப் போகிற தடைகளைத் தாண்டி இவர்கள் ஓடியாக வேண்டும் என்பது ஒன்று.

அது தவிர, சரித்திரக் காலந்தொட்டு இந்நாட்டின் ஆட்சியினுள் மறைந்து செயலாற்றி வரும், பௌத்த பீடங்களின் விருப்பம் எனும் தடையினையும் இவர்கள் தாண்டி ஓடியாக வேண்டும் என்பது மற்றொன்று.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஏற்கனவே வீழ்ந்து கிடக்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டியது இவர்கள் தாண்ட வேண்டிய தடைகளுள் மிகப் பெரிய தடையாய் இருக்கப்போகின்றது என்பது இன்னொன்று.

இந்நிலையில், இவற்றைச் சமநிலைப் படுத்தி வெற்றிபெற, மீண்டும் தமிழினம்தான் பலிக்கடாவாக்கப்படுமோ என்ற அச்சம், கற்றவர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.

சூழ்நிலை இப்படியிருக்க, ஜே.வி.பி.யின் சார்பில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் நம் யாழ் எம்.பி.க்கள், திருத்தப்படவுள்ள அரசமைப்புச் சட்டத்தில் நம் தமிழர்களைக் காவல் செய்ய முடியும் என்று சிலர் சொல்லி வருகிறார்கள். அது வெறும் கனவாகத்தான் இருக்கப் போகிறது.

அங்ஙனம் செயல்படவேண்டுமாயின் அவர்கள் கட்சியில் செல்வாக்குப் பெற்றவர்களாய் இருக்கவேண்டும். ஆனால் அவர்கள் அங்கு செல்வாக்குப் பெற, தம் தனிச் செல்வாக்கால் அக்கட்சிக்கு வெற்றி வாங்கிக் கொடுத்தவர்கள் அல்லர். அக்கட்சியின் செல்வாக்கால் வெற்றி பெற்றவர்கள். எனவே இவர்கள் பத்தோடு பதினொன்று, அத்தோடு இதுவொன்று என்றுதான் அங்கு இருக்கப்போகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், இம்முறை யாழ் தமிழர்கள் ஜே.வி.பி.க்கு வழங்கியிருக்கும் இந்த அதீத அங்கீகாரம் என்பது, இதுவரை அவர்கள் தமது உரிமைக்காக செய்து வந்த போராட்டங்களை கைவிட்டு விட்டதன் அடையாளம்தான் எனும் ஓர் கருத்தும் உலக அரங்கில் பதிவாகப் போகிறது.

சட்டச் சீர்திருத்தத்தில் என்ன மாற்றங்களைச் செய்யப்போகிறார்கள் என்பது பற்றி அறியாமலே, எதுவானாலும் "அதனை நாம் எதிர்த்தே தீருவோம்!" என்று கூறி நிற்கும் கஜேந்திரகுமாரின் கருத்து எவ்வளவு தவறானதோ, அதேபோல என்ன மாற்றம் வரப் போகிறது எனத் தெரிவதற்கு முன்னரே யாழ். தமிழர்கள் அரசுக்கு வழங்கியிருக்கும் ஆதரவும் தவறானதுதான் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

இந் நிலையில் அவசரப்பட்டு மூன்று சீற்றுகளை ஜே.வி.பி.க்கு அள்ளிக் கொடுத்த நம் யாழ் மக்களின் செயலை, அறிவீனர்களின் செயல் என்பதைவிட வேறு என்ன சொல்வது?

♦♦♦♦♦♦♦♦♦

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

**கேள்வி: மனக்குழப்பத்தோடு இயங்கிவரும் டாக்டர் அர்ச்சுனாவிற்கு இருபத்தெட்டாயிரம் வாக்குகளை அள்ளிக் கொடுத்து, வெல்லச் செய்த நம் யாழ். மக்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்: அழியப் போகிறது நம்மினம்! ஒரு காலத்தில், யாழ்ப்பாணத்தவர்கள்தான், இலங்கை வாழ் மக்களில் அதிகூடிய அறிஞர்களாய்த் திகழ்ந்தார்கள் என்பர். இன்று அந் நிலை நேரெதிராய் மாறிவிட்டது.



முட்டாள்தனத்தின் முதலிடம் நோக்கி நாம் இன்று விரைந்து நகர்ந்து கொண்டிருக்கின்றோம். போகிற இடங்களில் எல்லாம் யாழ்ப்பாணத்தில் பிறந்தமை பற்றிப் பெருமையுடன் நான் சொல்லியிருக்கிறேன். முதன்முறையாக அது பற்றி வெட்கப்படுகிறேன்.

1995ஆம் ஆண்டு அகதிகளாய் வந்து குவிந்தவர்களை, கைநீட்டி அணைத்துக் கொண்ட ஊர் சாவகச்சேரி. அவ்வூரை எப்போதும் என் மனம் ஆராதிப்பதுண்டு. இப்போது அவ்வூரை என்மனம் வெறுக்கத் தொடங்கியிருக்கிறது. “நடுநிலை அறியா ஊர் நரகமேயாம்“.

♦♦♦♦♦♦♦♦♦

**கேள்வி: சுமந்திரன் இல்லாமல் இங்கு ஏதும் நடக்காதா என்ன?**

பதில்: யார் சொன்னது? தாராளமாக நடக்குமே!

மாற்றப்படப் போகிற அரசமைப்பின் சரி, பிழைகளைத் தேர்ந்தெடுக்கப்பட்ட நம்மவர்களும், டாக்டர் அர்ச்சுனாவும் கண்டு பிடிக்கமாட்டார்களா என்ன?

உலக நாடுகளிலிருந்து நம்மின நலன் பற்றி விசாரிக்க வரும் வெளிநாட்டவருக்கு நடப்பு நிலைமையைத் தேர்ந்தெடுக்கப்பட்ட நம்மவர்களும், டாக்டர் அர்ச்சுனாவும் விளங்கப்படுத்த மாட்டார்களா என்ன?

ஜனாதிபதி, புதிய அரசியல் சட்ட ஆலோசனைகளைக் கேட்டால், தேர்ந்தெடுக்கப்பட்ட நம்மவர்களும், டாக்டர் அர்ச்சுனாவும் அவற்றை எடுத்துரைக்க மாட்டார்களா என்ன?

தமிழர்களுக்கு மாறான விடயங்களைச் சட்ட அமைப்பினுள் யாரும் நுழைக்க முற்பட்டால் அவற்றை எதிர்த்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட நம்மவர்களும், டாக்டர் அர்ச்சுனாவும் நீதிமன்றில் வாதிட்டு வெல்ல மாட்டார்களா என்ன?

இவற்றைச் செய்யக்கூடிய கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், நடக்கப்போவது என்னவென்று தெரியாமலே, புதிய சட்டவரைவை எதிர்க்கப்போவதாய்ச் சொல்லிவிட்டார்.

இந்நிலையில் மேற்சொன்னவற்றைச் செய்யச் சுமந்திரன்தான் தேவையென்று எந்த முட்டாள் சொன்னது?

ஹீ....ஹீ....ஹீ...!!!

♦♦♦♦♦♦♦♦♦

**கேள்வி: கிடைத்திருக்கும் “தேசியப்பட்டியல் ஆசனத்தை” சுமந்திரனுக்கு கொடுத்தால் என்ன?**

பதில்: நீங்கள் கொடுப்பீர்கள்! அவர் வாங்க வேண்டுமே. நான் உட்பட பலபேரும் சொல்லிப் பார்த்து விட்டோம். சொன்ன வார்த்தையை மீற முடியாதென்று உறுதியாய் அவர் மறுத்துவிட்டார். வார்த்தை அளவில் இல்லாமல் செயலிலும் அம் மறுப்பைக் காட்டிவிட்டார்.

எந்தமுகத்தை வைத்துக் கொண்டு அவரிடம் இப்பதவியை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கேட்பது? மற்றவர்கள் தமது வசதிக்காகவும், வாழ்வுக்காகவும் பதவிகளைத் தேடி நிற்க, ஏற்கனவே இருக்கும் அவற்றை ஓரளவு இழந்து, இனத்துக்காகப் பாடுபட்ட ஒருவரை, தோற்கச்செய்ததோடு அல்லாமல் அத்தோல்வியைக் கொண்டாடவும் செய்கிறோம்.

இன்னும் ஒரு ஆறு மாதத்திற்குள், தேர்ந்தெடுக்கப்படாத சுமந்திரனின் அவசியமும், தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றவர்களின் அனாவசியமும் தெரியவரும் என்று நினைக்கிறேன்.


♦♦♦♦♦♦♦♦♦

**கேள்வி: என்னை விரும்பும் வாக்காளர்கள், எனக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும் எனச் சில வேட்பாளர்கள் தமது ஆதரவாளர்களிடம் கேட்டுக் கொண்டமை பற்றி அறிந்தீர்களா?**

பதில்: “விதியின் பிழை மைந்தா“

♦♦♦♦♦♦♦♦♦

**கேள்வி: மாவை அவர்கள், வவுனியாவில் நடந்த தமிழரசுக் கட்சி அரசியற்குழுக் கூட்டத்தில், கட்சிக்கான “போனஸ் சீற்றை” தனக்கு இரண்டு வருடங்களுக்காவது தருமாறு கெஞ்சினாராமே?**



பதில்: வவுனியா டவுணுக்குள் யாரோ ஒருவருடைய வேட்டி அவிழ்ந்து விழுந்து கிடந்ததாய்ச் சிலர் சொன்னார்கள். மற்றும்படிக்கு நீங்கள் சொன்ன விடயம் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

♦♦♦♦♦♦♦♦♦

**கேள்வி: “போனஸ்” பதவியைச் சுமந்திரனுக்குக் கொடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்த சிறீதரன், அப்பதவியை மாவைக்கு வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டாராமே? நாடாளுமன்றத்தில் சுமந்திரனின் இருப்பை விட, மாவையின் இருப்பு இனத்தின் நன்மைக்கு அவசியமானது என்று அவர் கருதுகிறாரா?**

பதில்: சிரிப்புத்தான் வருகுதையா!

♦♦♦♦♦♦♦♦♦

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

**கேள்வி: ஐ.பி.சி.க்கும், லங்கா சிறிக்கும், டான் ரிவிக்கும் சுமந்திரன் மேல் அப்படி என்னதான் கோபம்?**

பதில்: தூண்டிலில் அகப்படாத மீனின்மேல் செம்படவனுக்குக் கோபம் வரத்தான் செய்யும். வலையில் அகப்படாத பறவையின் மேல், வேடனுக்குக் கோபம் வரத்தான் செய்யும். மகுடிக்கு ஆட மறுக்கும் பாம்பின் மேல், பாம்பாட்டிக்கு கோபம் வரத்தான் செய்யும். தமது பணத்தினுள் அகப்படாத சுமந்திரனின் மேல், இவர்களுக்கு கோபம் வருவதும் அது போன்ற ஒன்றுதான்.

♦♦♦♦♦♦♦♦♦

**கேள்வி: தமிழரசுக் கட்சியின் "போனஸ் சீற்றை" ஒரு பெண்ணுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று சிலர் போர்க் கொடி தூக்கத் தொடங்கியிருக்கிறார்களே?**

பதில்: பெண்ணுக்குக் கொடுக்கக்கூடாது! என்று சொல்வதும், பெண்ணுக்குத்தான் கொடுக்க வேண்டும்! என்று சொல்வதும் ஒன்றேதான். இரண்டிலுமே பெண் இழிவு செய்யப்படுகிறாள்.

♦♦♦♦♦♦♦♦♦

**கேள்வி: தமிழரசுக்கட்சியின் தலைமையை இனி யாருக்கு கொடுக்கலாம் என்று நினைக்கிறீர்கள்?**



பதில்: இதில் என்ன சந்தேகம்? நடந்த தேர்தலில் மக்கள் ஆதரவை அதிகம் பெற்றவருக்குத்தான் கொடுக்க வேண்டும்.

♦♦♦♦♦♦♦♦♦



# அருண் ஹேமச்சந்ரா பதவியேற்பு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட தேசிய மக்கள் சக்த.நாடாளுமன்றஉறுப்பினர்அருண்ஹேமச்சந்ரா, வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத்துறை பிரதி அமைச்சருக்குரிய கடமைகளை வியாழனன்று, வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் முன்னிலையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தார்.

இதன் மூலம் இவர் திருகோணமலையின் 76 வருட அரசியல் வரலாற்றில் முதலாவது தமிழ் பிரதி அமைச்சர் என்ற வரலாற்று சாதனையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# வடக்கின் பல அதிகாரிகளிற்கு இடமாற்றம்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் உள்ள பல பிரதேச செயலாளர்களுக்கு 2025 ஜனவரியில் இருந்து வருடாந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அலோக பண்டாராவின் 2024-11-22 திகதிய கடிதம் மூலம் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கமைய தற்போதை கோப்பாய் பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறி கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளராகவும், கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் ம.உமாமகள் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளராகவும், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் எஸ்.மஞ்சுளாதேவி கரவெட்டி பிரதேச செயலாளராகவும் கரவெட்டிப் பிரதேச செயலாளரான




ஈ.தயாளருபன் கோப்பாய் பிரதேச செயலாளராகவும் இடமாற்றப்படுகின்றனர்.

இதேபோன்று தற்போதைய பூநகரிப் பிரதேச செயலாளரான ரி.அகிலன் வடக்கு மாகாணசபைக்கு இடமாற்றப்படும் அதேநேரம் வடக்கு மாகாண சபையில் உள்ள வனஜா பூநகரிப் பிரதேச செயலாளராக இடமாற்றம் செய்யப்படவுள்ளார்.

# வாகரையில் மின்சார சபைக்கு எதிராக பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்!




**( எஸ்.சதீஸ்)**

வாகரை பகுதியில் மின்சார சபையின் அசமந்தப் போக்கிற்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை மக்களினால் எதிர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வாகரை பிரதேச செயலக பிரிவில் உள்ள வாகரை, ஊரியன்கட்டு, தட்டுமுனை, கதிரவெளி உள்ளிட்ட சில கிராமங்களில் நாளாந்தம் பல மணி நேரம் முன்னறிவித்தல் எதுவுமின்றி, கடந்த இரண்டு மாதங்களாக மின்வெட்டினை மேற்கொள்வதால் இம்முறை உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள் உள்ளிட்ட கிராம பொது மக்கள் தமது நாளாந்தக் கடமைகள் மற்றும் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் சிரமப்படுகின்றனர் எனத் தெரிவித்தே இப்பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மின்சார சபையின் இச் செயற்பாட்டினால் பாடசாலை மாணவர்களின் பரீட்சை கால இரவு நேர கற்றல் நடவடிக்கை முற்றாக பாதிப்படைவதுடன் அவர்களது எதிர்காலம் பாதிப்படைய இது ஏதுவாக அமையுமென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

“துண்டிக்காதே, துண்டிக்காதே முன்னறிவித்தல் இன்றி மின்சாரத்தை துண்டிக்காதே!”, ”மின்சார சபையே, மின்சார சபையே, பாடசாலை மாணவர்களின் கல்விக்கு தடையாக இருக்காதே!” போன்ற வாசகங்களை பொறித்த பதாதைகளை ஏந்தியவாறு பொது மக்கள் சுமார் ஒரு மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இன்றில் இருந்து ஒரு வார காலத்திற்குள் மின்சார துண்டிப்புப் பிரச்சினையை நிவர்த்தி செய்யப்படாவிட்டால் இப்பிரச்சினையை நாம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்வோம் எனவும் இம்மக்கள் இங்கு தெரிவித்தனர்.

இதன் போது வாகரை பொலிஸார் அங்கு வருகை தந்து கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

தமக்கான தீர்வை பெற்றுத்தருமாறு வாகரை பிரதேச செயலாளர் திருமதி. அமலினி கார்த்தீபனிடம் மகஜரினை கையளித்ததனைத் தொடர்ந்து பிரதேச செயலாளரின் வாக்குறிதியின் அடிப்படையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.














# மானவ சேவையே மாதவ சேவை!

**(கொழும்பு, பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில், கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சாயி நிலையத்தில், பாபாவின் 99 ஆவது பிறந்த நாள் இன்று (23) சனிக்கிழமை இடம் பெறவுள்ளது.)**

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா நமக்கு விட்டுச் சென்ற பாரம்பரியங்களில் ஒன்று அன்பாகும். அதனைப் புரிந்து கொண்டால் சோர்வடைந்த மனதுக்கு முழுத்தெளிவு கிடைக்கும். சாயி அவதாரத்தின் தோற்றம் அன்பின் வடிவம். அவர் சாயி பக்தர்களின் இதயங்களில் அன்பின் ஒளியையேற்றினார். அன்றாட வாழ்க்கையில். அந்த ஒளியானது மற்றவர்களுடன் பரிமாறிக்கொள்ளத் தூண்டியது. சாயி சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்படச் செய்தது.

லட்சக கணக்கானவர்கள் பாபாவின் அன்பால் உந்தப்பட்டதால், உலகளாவிய நிலையில் "செயல்படும் அன்பாக" அது ஆகியுள்ளது. அன்புதான் பகவானின் மிகப்பெரிய அருட்கொடையாகும். அவரது பாரம்பரியத்தின் மற்றொன்று சாயி சேவையாகும். இது மிக முக்கியமானது. சாயி சேவை என்பது ஒரு தன்னலமற்ற, பக்தியுடன்கூடிய சேவை.

இந்தச் சேவை புரிவதற்குத் தேவை சாயி நிறுவனங்கள். சாயி நிறுவனம் என்பது யாவருமே தமது ஆன்மீகச் சாதனைகளைச் செய்ய ஏதுவான கருவியாகப் பயன்படும் பொருட்டுப் பகவானால் ஏற்படுத்தப்பட்டது.

பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் தங்களது பதவி, அந்தஸ்து, கௌரவம் என்று பாராது தாமாகவே முன்வந்து அன்போடும் பக்தியோடும் பல இடங்களில் பகவானின் "மானவ சேவையே மாதவ சேவை" என்ற உபதேசத்தைக் கடைபிடித்து பணிசெய்து வருகின்றனர்.

"ஒரு டம்ளர் தண்ணீருக்கு எந்த மதிப்பும் கிடையாது. ஆனால் அதையே பத்து தம்ளர் பாலுடன் சேர்த்துவிட்டால் அதற்கு மதிப்பு வந்துவிடுகிறது. அது பாலாகவே கருதப்படுகிறது. அதற்கு மாறாக ஒரு டம்ளர் பாலை பத்து டம்ளர் தண்ணீரில் விட்டுவிடுங்கள். அதற்கு உள்ள மதிப்பும் போய்விடுகிறது. "பாலா இது? வெறும் தண்ணீர்" என்று இகழ்ந்து அதைத் தூரக் கொட்டிவிடுவார்கள்.

ஆகவே நாம் நாடும் சாயி சத்சங்கம் நம்மைவிட உயர்ந்ததாக உண்மையான சத்சங்கமாக அமைய வேண்டும். அப்படிக் கூறியவர் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா. இந்த உவமையானது உண்மை. இன்றைய காலகட்டத்துக்கு மிகவும் தேவையானது. பகவான் சமாதி நிலையில் வாழந்து வந்தாலும் அவர் வாழ்ந்து வீற்றிருக்கும் பிரசாந்தி நிலையம் மட்டுமே எமக்கு ஒரு கைலாயம்.

பகவானின் பக்தி பஜனைக்கும் சாயி சேவைக்கும் முதலிடம் கொடுத்து வருவது கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம். அதாவது சாயி சேவையாக வைத்தியசாலைகளுக்கும், பாடசாலைகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதுண்டு. இந்த இரண்டு இடங்களில்தான் இன, மத, மொழி மக்களைக் காணமுடியும்.

இங்கு செய்யப்படும் சேவைகள் பகவானின் சர்வமத சகோதரத்துவத்தை ஏற்படுத்தும்.

அதனால்தான் யாழ். பூநகரி வைத்திய சாலைக்கு வழங்கிய தண்ணீர் திட்டம், வத்தளை, ஹெந்தலை, கந்தானை வைத்தியசாலைகளுக்கு வழங்கிய சத்திர சிகிச்சை நாற்காலிகள் மற்றும் அறுவை சிகிச்சைக்கான கட்டில்கள், கட்டில் விரிப்புகள், தலையணை உறைகள், மருத்துவ உபகரணங்கள், வருடாவருடம் இடம்பெறும் இரத்ததானம், மூக்குகண்ணாடி வழங்குதல், சாயி நிலையத்தில் ஒவ்வொரு ஞாயிறு தினத்திலும் இடம்பெற்றுவரும் இலவச வைத்திய உதவிகள், மதிய போசனத்துடன் கூடிய இலவச பாடசாலை என்பன ஒரு சாயி சேவையாக செய்யமுடிகிறது.

கொழும்பு, பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில், கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சாயி நிலையத்தில், பாபாவின் 99 ஆவது பிறந்த நாள் இன்று நவம்பர் 23 ஆம் திகதி சனிக்கிழமை பிரசாந்தி கொடி ஏற்றத்துடன் இடம்பெறவுள்ளது.

காலை 5 மணி தொடக்கம் பகல் ஆராத்தி வரை அனைத்து நிகழ்வுகளும் இடம்பெறும். அன்னதானமும் நடைபெறவுள்ளது. சிறப்பு அம்சமாக 'பிறந்தநாள் கேக்' வெட்டுதல், திருவூஞ்சல், திரிமங்களாராத்தி என்பன இடம்பெறும்.

அத்துடன் மாலை 5 மணிக்கு பாபாவின் ஐம்பொன் திருவுருவச்சிலைக்கு அபிஷேகம் செய்யப்பட்டுச் சித்திரத்தேர் பவனியும் இடம்பெறும்.

**எஸ் .என். உதயநாயகம்,**
**பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபா**
**மத்திய நிலையம்,**
**கொழும்பு.**

# நல்லூர் பிறந்த நாவலர் பெருமான்!



நாவலர் எழுந்தார் நம்சைவம் பிழைத்தது
நற்றமிழ் நடையை நந்தமிழ் பெற்றது
கோவிலைக் களமாய் ஆக்கினார் நாவலர்
காவலர் ஆகியே கருத்துகள் கொடுத்தார்

சைவத்தை விட்டுச் சறுக்கிய மக்கள்
மெய்யாம் சமயத்தை விளங்கிடச் செய்தார்
கைகளைக் கூப்பி கடவுளை வணங்கிட
கருத்தாய் பிரசங்கம் ஆற்றியே நின்றார்

திண்ணையில் படித்தார் தெரிவன தெரிந்தார்
இலக்கியம் இலக்கணம் இங்கிதம் படித்தார்
ஆங்கிலம் படித்தார் வடமொழி படித்தார்
ஆனால் அகமோ சைவம் அமர்த்தினார்

வேதம் அறிவார் திருமுறை அறிவார்
நாதன் நமச்சிவாய நன்றாய் அறிவார்
போதனை செய்வதில் சாதனை காட்டினார்
நல்லூர் நாயகன் நாவலர் பெருமான்

எடுத்த கருமம் சிறப்பாய் அமைய
இல்லறம் நாடா இருந்தவர் நாவலர்
நல்லறம் சைவம் தமிழென எண்ணியே
வாழக்கைப் பாதையை வகுத்தவர் நாவலர்

ஆறு முகமென பெயரவர் பெற்றவர்
நாவின் வன்மையால் நாவலர் ஆகினார்
பாவம் கண்டிடின் கோபம் கொள்ளுவார்
பண்பு குறைந்தவர் பக்கம் சென்றிடார்

கல்வி என்பதை கண்ணாய் எண்ணினார்
கற்று உயர்ந்திட கருமம் ஆற்றினார்
கல்விக் கூடங்கள் எழுந்து நின்றிட
அல்லும் பகலுமே அனைத்தும் ஆற்றினார்

தமிழைச் சைவத்தை பாடம் ஆக்கினார்
அனைத்து அறிவியல் கற்கவும் தூண்டினார்
ஒழுக்கக் கல்வியை உயிராய் எண்ணினார்
தனித்துத் தலைவனாய் விளங்கினார் நாவலர்

கற்றிட நூல்களைத் தானே எழுதினார்
அச்சிட்டு நூல்கள் வெளிவர உதவினார்
அறிவுடை ஆசான்களை பள்ளியில் அமர்த்தி
தெளிவுடன் கற்றிட வழிக்காட்டி ஆயினார்

தத்துவம் புராணம் சமய நூல்கள்
மொத்தமாய் பாடல் ஆகியே இருந்தன
பாமரர் விளங்கா வகையினில் இருந்ததை
பக்குவப் படுத்தினார் நாவலர் பெருமான்

பாடல் அனைத்தையும் வசனம் ஆக்கினார்
படிப்பவர் யாவரும் விளங்கிடச் செய்தார்
விளங்கிய மக்கள் விழித்துமே எழுந்தார்
நாவலர் நோக்கம் நன்மையாய் விரிந்தது

சைவம் காத்தார் தமிழையும் காத்தார்
மெய்மையைப் பேசி மேலாய் உயர்ந்தார்
உய்யும் வழிக்கு இறையே என்றார்
நல்லூர் பிறந்த நாவலர் பெருமான் !

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,**
**மெல்பேர்ண், ஆஸ்திரேலியா.**

# சிறந்த தமிழினப் பற்றாளர் மதியண்ணா; அவரது இழப்பு தமிழினத்தின் பேரிழப்பாகும்!

## சமூக செயற்பாட்டாளர் ஜெயசிறில் அனுதாபம்



**( வி.ரி.சகாதேவராஜா)**

கனடாவில் நேற்று இரவு துரதிஷ்ட வசமாக உயிரிழந்த யாழ். அரியாலையைச் சேர்ந்த சிறந்த தமிழினப் பற்றாளர் குலத்துங்கம் மதிசூடி அண்ணாவின் இழப்பு தமிழ் இனத்துக்குப் பேரிழப்பாகும்.

பிரபல சமூக செயற்பாட்டாளரும், முன்னாள் தவிசாளருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தனது அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரது திடீர் மறைவு குறித்து அவர் வெளியிட்டுள்ள அனுதாபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிறந்த மண்ணை வெகுவாக நேசித்த தமிழினப் பற்றாளர் மதி அண்ணா. கொரோனா காலகட்டத்திலும் வெள்ள அனர்த்த காலகட்டத்திலும் வடக்கில் மாத்திரமல்ல கிழக்கில் அம்பாறை மாவட்டத்திலும் பாரிய சேவைகளை செய்தவர்.

அது மாத்திரமல்ல ஒவ்வொரு வருடமும் வந்து நலிவுற்ற மக்களுக்கு நேரடியாகச் சென்று உதவி செய்து வந்தவர்.

எமது மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்திலும் சில ஆலோசனைகளை வழங்கி சிறப்பித்து பல ஆக்கபூர்வமான பல திட்டங்களிலும் பங்கெடுத்தவர்.

அவர் தமிழினத்தின் மிகுந்த பற்றாளராக விளங்கியவர். கனடாவில் கடந்த 40 வருடங்களாக தாயக மக்களின் உணர்வுகளை விளங்கிடச் செய்தவர்.

ஆன்மீகத்திலும் அதிக ஈடுபாடு கொண்டவர். இறுதியாக காரைதீவு பாலையடி வாலவிக்னேஸ்வரர் ஆலய கன்னி தேரோட்டத்தில் கலந்து கொள்வதற்காகக் கனடாவில் இருந்து வந்தவர்.

சேவையாளரான அவர் அக்கால கட்டத்தில் மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பில் திறந்து வைத்த சுவாமி விவேகானந்தர் நினைவு பூங்காவையும் ஆர்வத்துடன் பார்வையிட்டவர்.

அவரது இழப்பையிட்டு அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் சார்பாக அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.– என்றுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 23.11.2024




இன்று மகிழ்ச்சியளிக்கு வகையில் எந்த நிகழ்வும் காணப்படாது. அமைதியாக இருப்பதும் ஆன்மீக ஈடுபாடும் சிறந்தது.

பணியிடத்தில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கட்டுப்பாடு இழப்பீர்கள். இதனால் விவாதம் ஏற்படும். இது இருவரிடையே காணப்படும் அன்பை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. எதிர்கால தேவைக்காக ஒவ்வொரு பணமும் சேமிப்பது சிறந்தது.

கண்களில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று வேடிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் நாள். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை அணுகுமுறை பராமரிப்பீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் காணப்படும்.நீங்கள் சிறிது பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று நேர்மறையான ஆற்றல் உங்களிடம் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் அமைதியான சூழ்நிலை காணப்படும். அனுசரனையான மன நிலை காணப்படும்.

பணியிடச் சூழல் திருப்தியை அளிக்கும். நீங்கள் குறைவான முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் அணுகுமுறையில் அர்ப்பணிப்பு காணப்படும். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

பணியிடச் சூழலில் முன்னேற்றம் அவசியம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அதிக சொந்தம் கொண்டாடுவீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. எனவே எதிர்காலத்திற்காக சேமிக்க வேண்டும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நேர்மறையான ஒத்துப் போகும் மனநிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடச் சூழலில் பலன்கள் கலந்து காணப்படும். நீங்கள் திறம்பட செயலாற்ற கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு பணத்தை பயன்படுத்தவும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. பதட்டத்தைக் குறைத்து ஆரோக்கியத்தை பராமரியுங்கள்.




இன்று விழிப்புணர்வை பராமரிக்க வேண்டிய நாள். உங்கள் வீட்டில் சுப நிகழ்சிகள் ஏதாவது இன்று திட்டமிட்டிருந்தால் அதனை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது.

பணியைப் பொறுத்தவரை இன்று மும்மரமான நாள். சிறந்த செயல்திறனுக்கு நீங்கள் கூடுதல் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவு சுமூகமாக இருப்பது உங்கள் கையில் தான் உள்ளது.

நிதி வளர்ச்சி ஸ்திரமாக இருக்காது. நீங்கள் பணம் வீணாகாமல் தடுக்க சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும். ஒவ்வாமை காரணமாக தொண்டையில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். சாதகமான பலன்களை அளிக்கும். நீங்கள் திருப்தியை உணர்வீர்கள்.

நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த நேர்மறை போக்கின் காரணமாக உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதியும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்றைய விளைவுகளை எண்ணி வருத்தப்படுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது.அதிர்ஷ்டமற்ற நிலையை சமாளிக்க நீங்கள் நம்பிக்கையுடன் இருப்பது சிறந்தது.

பணி சம்பந்தமான பயணம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பயணத்தின் போது தேவையற்ற பதட்டம் காணப்படும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனை எளிதாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்திய உள்ளது. எனவே பணத்தைக் கையாளும்போது கூடுதல் கவனம் தேவை.

இன்று ஆரோக்கியமாய் இருக்க நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 23.11.2024




இன்றைய நாளை நன்கு செலுத்த நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டும்.

நீங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் நன்மை பெறலாம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை இன்று சுமூகமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம். என்றாலும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும். வருகின்ற வாய்ப்புகளை முறையாக பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பல நன்மைகளைப் பெறலாம்.

பணி மாற்றம் மற்றும் பணி சம்பந்தமான பயணம் நேரலாம். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கலாம்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். உங்களின் உரையாடும் விதம் காரணமாக நல்ல சூழல் உருவாகும்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரை பலன்கள் கலந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள்.

நீங்கள் திருப்தியான நிலையை உணர்வீர்கள். உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியும் நல்லுறவும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி நேர்மறையான அன்பான எண்ணம் கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். இன்று சீரான நிதி நிலைமை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று ஒழுக்கமான போக்கும் மன உறுதியும் காணப்படும்.




ஒழுக்கமான வாழ்வு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை உயர்ந்து காணப்படும். நல்ல உறுதி காணப்படும்.

உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வெற்றி கிட்டும். உங்கள் தொழிலில் சுறுசுறுப்பு காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். சேமிப்பும் உயரும். பயனுள்ள புதிய முதலீட்டிற்கு உகந்த நேரம்.

இன்று உங்கள் ஆற்றலும் உறுதியும் அதிகரித்து காணப்படும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park